# யுத்தத்தின் முடிவில் ஊடகத்துறை எதிர்நோக்கும் முக்கிய சவால்கள்



சர்வதேச ஊடக சுதந்திர தூதுக்குழுவின் இலங்கை அறிக்கை, ஜனவரி 2010

# ரஙழயமுனதனைமா லை ரனமுர் றரேளகோனய.

## சர்வதேச ஊடக சுதந்திர தூதுக்குழுவின் இலங்கை அறிக்கை, ஜனவரி 2010.

## உள்ளடக்கம


1. அறிமுகம 4
2. அரசியல் பின்னணி 4
3. புதிய முக்கிய அம்சங்கள 6
4. கடந்த கால துஷ்பிரயோகங்கள 9
5. அவதூறும் துன்புறுத்தலும 12
6. ஜே. எஸ். திஸ்ஸநாயகம் குற்றஞ்சாட்டப்பட்டார் 14
7. அடிப்படை மனித உரிமைகள் சுதந்திரத்துக்காக சர்ச்சைக்குள்ளாவது 16
8. மாகாண ரீதியான நிலபரம 18
9. பத்திரிகை சுதந்திரத்தின் மீள் ஆரம்பம் ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல 20
10. ஊடக சுதந்திரத்தை பிரச்சார விடயமாகக்கொள்வது 21
11. சிபார்சுகள் 22
12. குறிப்பு மற்றும் உசாத்துணை 22



මෙම ලේඛනය සකස් කරන ලද්දේ ශ්‍රී ලංකාව සම්බන්ධ මාධ්‍ය නිදහසේ අන්තර් ජාතික දූත මෙහෙවර වෙනුවෙන් අන්තර් ජාතික ජනමාධ්‍යවේදීන්ගේ සම්මේලනය විසිනි. දූත මෙහෙවරෙහි සංචාරය සහ වාර්තාව පළ කිරීමෙහි ලා යුරෝපීය සංගමයෙන් සහ අන්තර් ජාතික මාධ්‍ය සහයෝගිතාවයෙන් ලද මූල්‍ය අනුගහය ස්තුති පූර්වකව සදහන් කරමු. මෙහි පළ කැරෙන අදහස් හුදෙක් ම ශ්‍රී ලංකාවේ මාධ්‍ය නිදහස පිළිබඳ අන්තර් ජාතික දූත මෙහෙවර සතු බව ද සැළකුව මනාය.



இந்த ஆவணத்தின் பதிப்பரிமையுடையவரது அனுமதியின்றி இதில் உள்ள எந்தவொரு உள்ளடக்கமும் எவ்வடிவிலும் மீள்பதிப்பு, மீள்பிரசுரம், கணனி மயப்படுத்தல் போன்றவற்றில் இருந்து பூரணமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.



ජාත්‍යන්තර ජනමාධ්‍යවේදීන්ගේ සම්මේලනය විසින් ඉන්දියාවේ දී මුද්‍රණය කරන ලදී.
ප්‍රථම මුද්‍රණය 2010 ජනවාරි


சர்வதேச ஊடக சுதந்திரம், மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கான தூதுக்குழு ஆகியவற்றுடன் இணைந்து கொண்ட ஏனைய அமைப்புக்கள்.

**சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் :** சுகுமார் முரளிதரன்.

**சர்வதேச பத்திரிகை நிறுவனம்:** அந்தனி மில்ஸ்.

**சர்வதேச ஊடக ஒத்துழைப்பு:** அருள்செல்வன் செந்திவேல்

தொகுப்பு xix

பத்திரிகையாளரைப் பாதுகாப்பதற்கான கமிட்டி (சி. பி ஜே)

சுதந்திர குரல்

சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் (ஐ. எவ். ஜே)

சர்வதேச கருத்துச் சுதந்திர பரிமாற்றம் (ஐ. எவ். இ. எக்ஸ்)

சர்வதேச ஊடக ஒத்துழைப்பு (ஐ. எம். எஸ்)

சர்வதேச ஊடக நிறுவனம் (ஐ. பி. ஐ)

சர்வதேச செய்தி பாதுகாப்பு நிறவனம் (ஐ. என். எஸ். ஐ)

எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் (ஆர். எஸ். எவ்)

தெற்காசிய ஊடக கமிஷன் (எஸ். ஏ. எம். ஸி)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனம் (ருநேஸ்ஊழு)

சமூக வானொலி ஒலிபரப்பாளரின் உலக நிறுவனம் (ஏ. எம். ஏ. ஆர். ஸி)

உலக செய்திப் பத்திரிகையாளர் அமைப்பு (டபிள்யு. ஏ. என்)

உலக ஊடக சுதந்திர கமிட்டி (டபிள்யு. பி. எவ். ஸி)


**பிரதம ஆசிரியர் :-** சுகுமார் முரளிதரன்.

**ஆசிரியர் :-** டெபொரா முயிர்.

**பதிப்பு வடிவமைப்பு :-** இம்பள்ஸில் கிரியேசன்ஸ்.





இந்த ஆவணம் சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளத்தினால் இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச ஊடகத்துறை தூதுக்குழு சார்பாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கு நிதியுதவி அளித்த ஐரோப்பிய கமிஷன், மற்றும் சர்வதேச ஊடக ஒத்துழைப்பு அமைப்பு ஆகியவை பாராட்டுக்குரியவை. இந்த ஆவணத்தில் உள்ள கருத்துக்கள் முற்றிலும் இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச ஊடகத்துறையினுடையதேயாகும்.


**මෙම වාර්තාව මුද්‍රණයට යැවෙන අවස්ථාවෙහි දැන ගන්නට ලැබුණේ ජේ.එස්. තිස්සනායගම් ඇප පිට නිදහස් කරන ලද බව ය.**

# முன்னுரை

இலங்கையில் உள்ள ஊடக நடவடிக்கைகள் சார்ந்த நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கும் பணிகளில் ஈடுபடுவதோடு, ஊடகத்துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பவற்றை மதிப்பீடு செய்ய ஊடகசுதந்திரம், மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கான சர்வதேச நிறுவனம், பரந்துபட்ட தனது பிரதிநிதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய விசேட குழுவொன்றை 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் உட்பட மீளவும் 2008 ஆம் ஆண்டு அக்டோபரில் இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தது.

இது இவ்வாறிருக்க மிக அண்மைக்காலத்தில் நவம்பர் 2009 ஆம் ஆண்டு, இலங்கையின் சர்வதேச ஊடக சுதந்திர நிறுவனத்தின் கூட்டு நிறுவனமான சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் தனது நடவடிக்கையொன்றினை மேற்கொண்டிருந்தது.

இலங்கைக்கான அவ்விசேட நடவடிக்கைக்குழு சர்வதேச பத்திரிகை நிறுவனம் (ஜீஜ), மற்றும் சர்வதேச ஊடக ஒத்தழைப்பு நிறுவனம் (ஐஆளு) ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது.

இத்தகைய நடவடிக்கையின் மூலம் இலங்கை பற்றித் தயாரான அறிக்கை பல முக்கிய விடயங்களைக் கண்டறிந்திருந்தது. இலங்கையில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக இடம்பெற்ற உள்நாட்டுப் பிரச்சினையின் காரணமாக ஊடகத்துறை எதிர்நோக்கியுள்ள முக்கிய சவால்கள், மற்றும் அரசியலில் நடவடிக்கைகள் தோன்றியுள்ள புதிய மாற்றங்களையும் இந்த அறிக்கை உள்ளடக்கியிருந்தது.

நவம்பர் மாதம் 2009 ஆம் ஆண்டு தமது இலங்கை விஜயத்தை மேற்கொண்ட சர்வதேச ஊடக அமைப்பினர், தற்போதைய அரசியல் நிலபரம், சந்தர்ப்ப சூழ்நிலைகளோடு, அச்சுறுத்தல்களை பல்வேறு விதத்திலும் கொண்டிருந்ததை அறிந்திருந்தனர்.

முன்னாள் இராணுவத்தளபதியொருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத்தயாராகியுள்ளார். இப்போட்டி ஊடகத்துறையினருக்கு தகவல்களைத்திரட்டும் விடயத்தில் விரிவான வாய்ப்பைத் தந்தள்ளது.

அதேசமயம் சூடேறியுள்ள அரசியல் நிலபரம் காரணமாக சில விபரீதமான சூழல்களுக்கும் முகங்கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் தோன்றியுள்ளன.

எப்போதுமே முறுகல் நிலையைக் கொண்டுள்ள ஊடகத்துறையினருக்கும், அரசியல் அதிகாரத்திலுள்ளவர்களுக்கும் இடையே சில புதிய விவகாரங்கள் தோற்றம் பெறத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் மற்றும் அதன் அடிப்படையிலான மனிதாபிமானப் பிரச்சினைகள் என்பவை பற்றி ஆராய்வது ஒரு தணிவடைந்த நிலையிலுள்ளது. ஊடகத்துறையினரால் இவ்விகாரம் ஆராயப்படவேண்டியதொன்றாக இருக்கின்றபோதிலும், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் மத்தியில் இவ்விடயம் ஒரு பிரதான சமாச்சாரமாக விவாதிக்கப்படுவதாக இருக்கின்றது.

எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதித் தேர்தலுக்கான பொதுவேட்பாளர் யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் ஊடகத்துறையினர் எதிர்கொண்ட அபாயகரமான சூழ்நிலைகைளை விசேடமாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியாகத் தாம் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் ஊடகத்துறையினருக்கு ஏற்பட்ட பாதகமான நிலை குறித்து ஆராய்வதில் கவனஞ் செலுத்துவதோடு, அவர்களுடன் ஒரு நல்லிணத்தை ஏற்படுத்த முயற்சிப்பதற்கும் தம்மை அர்ப்பணிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

இக்கருத்துக்கள் குறித்து ஊடகத்துறையினர் உற்சாகமடைந்துள்ள அதேசமயம் , சில ஊடகவியலாளர்கள் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இராணுவத்தளபதியாக அவர் ஊடகத்துறை பற்றிக் குறிப்பிட்டவற்றை மாசற்றவை எனக் கருதுவதற்கும் மறுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஊடகத்துறையினர் மீதான அவதுாறுகள் பெரிதும் குறிப்பிடாததோடு, 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடாபாகவும் புலன்விசாரணைகளில் மிகச்சிறிதளவிலான முன்னேற்றமே காணப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச ஊடகத்துறையினர் தயாரித்த அறிக்கை லசந்த விக்கிரமதுங்க விவகாரத்தையும், வேறு விடயங்களின் புலன்விசாரணைகளையும் ஆவணப்படுத்தியுள்ளது. ஊடகவியலாளா கே. எஸ். திஸ்ஸநாயகம் மீதான குற்றச்சாட்டு, மற்றும் அவர் மீது தாக்கலான வழக்கு விசாரணையின் நம்பகத்தன்மையையும் ஆராய்வதோடு அவருடன் கைதாகி விடுதலையான வேறு இரு குற்றவாளிகள் குறித்தும் கவனத்திலெடுத்துள்ளது.

பல்வேறு ஊடகவியலாளர்கள், அவர் மீதான அடிப்படை உரிமை மீறல் குறித்து நிவாரணத்தை அல்லது நீதி நியாயத்தைப் பெற்றுக்கொள்வதிலிருந்தும் விலகும் விதத்தில் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளன.

சர்வதேச விசேட குழு அறிந்து கொண்டு தீர்மானித்தவற்றில் பத்திரிகையாளர்கள் அடிப்படை உரிமைகள் குறித்து அரசியல் அமைப்பின்

பிரகாரம் தாம் பெறக்கூடிய சட்ட உதவிகள் சம்பந்தமான விண்ணப்பங்களை வாபஸ் பெறவும் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விண்ணப்பங்கள் பெரிதும் அவர்கள் நீண்டகாலம் தவறான விதத்தில் தடுத்து வைத்திருக்கபபட்டமைக்கு நிவாரணம் தேடுபவையாக அமைந்திருந்தன.

அரசாங்கத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையொன்றில், 1973 ஆம் ஆண்டில் காணப்பட்ட ஊடகத்துறையினர் மீது அழுத்தங்களைக் கொடுக்கும் விதிமுறைகள் பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. ஆனால் இத்தகைய நடவடிக்கை பத்திரிகையாளர்களாலும், பத்திரிகை வெளியீட்டாளர்களாலும் கண்டனத்துக்குள்ளானதுடன் தமக்கென ஒழுக்கவிதிமுறைகளை பத்திரிகை சமூகத்தினர் தயாரிக்க முன்வந்துள்ளனர்.

சர்வதேச ஊடகவியலாளர்களின் ஆய்வாளர்கள் இலங்கையில் தாம் கண்டறிந்தவை குறித்து பல்வேறு சிபார்சுகளை இலங்கையின் ஊடகத்துறையினருக்கும், இலங்கை அரசுக்குமிடையே இருக்கவேண்டிய உறவு குறித்து குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சிபார்சுகளில் வெளிநாடுகளில் புகலிடம் கோரியுள்ள ஊடகத்துறையினர் நாடு திரும்ப வேண்டியதன் அவசியமும் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, அரச ஊடகத்துறை அதன் ஊடகவியலாளர்கள் எவ்வித குறுக்கீடுகளையும், தலையீடுகளையும் கொண்டிருக்காமல் தேர்தல் காலங்களில் பணிபுரிவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

கூடவே அரச ஊடக நிறுவனங்களை பொதுச் சேவை நம்பிக்கை நிறுவனமொன்றின் மேற்பார்வையின் கீழ் இருக்க அனுமதிப்பதோடு, தகவல்களைப் பெறுவதற்கான உரிமையை சட்டமூலமாக்கி, ஊடகத்துறையினர் மீது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதூறான நடவடிக்கைகள் விசாரிக்கப்பட்டு, உரிய நிவாரணங்கள் வழங்கப்படவேண்டுமெனவும், இவை நம்பகத்தன்மை, நல்லிணக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இந்த விசேட சர்வதேச ரீதியிலான அறிக்கை இலங்கையின் உத்தியோகபூர்வமொழிகளான தமிழ், சிங்களம் ஆகியவற்றில் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகக்கான பிரயாணச்செலவு, மற்றும் அறிக்கையைத் தயாரித்து வெளியிடுவதற்கான பொறுப்பேற்க ஐரோப்பிய யூனியனும், சர்வதேச ஊடக ஒத்துழைப்பு நிறுவனம் ஆகியவை முன்வந்துள்ளன.

# 1அறிமுகம்

இலங்கையின் கால்நூற்றாண்டு கால யுத்தம் அரசியல் ரீதியாகப் பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுள்ள அதேசமயம், ஊடகத்துறை அடிக்கடி நன்கு திட்டமிடப்பட்ட முறையில் அவதூறுகளுக்கும், தாக்குதல்களுக்கும் உள்ளாகிய நிலை காணப்படுகின்றது. இது தவிர உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அரசாங்கமும், ஆயுதக்குழுக்களும் சமரசப்பேச்சுக்களுக்கான சந்தர்ப்பங்களுக்கு சிறிதளவு சந்தர்ப்பங்களே வழங்கிய நிலையில், பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்த மாற்று யோசனைகளை வழங்குவது தொடர்பாக ஊடகத்துறையினருக்கு எவ்வித வாய்ப்புக்களும் தரப்பட்டிருக்கவில்லை. அதேசமயம் முக்கிய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் சம்பந்தமான சர்ச்சைக்குரிய விடயங்களை யுத்த நடவடிக்கைகள் குறித்து சேகரிப்பதிலும் தடைகள் இருந்தன.

இலங்கையின் மத்திய அரசிலிருந்து விலகி சட்டபூர்வமற்றதாக பிரிக்கப்பட்டிருந்த வடக்கு-கிழக்குப் பிரதேசம், இரு வேறு அரசியல் மற்றும் கலாசார அம்சங்களைக் கொண்டிருந்ததுடன் ஊடகத்துறையினருக்கு அபாயகரமான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

இத்தகைய அபாயகரமான சூழலில் நாட்டின் அனைத்து ஊடகத்தறையினரும் தமது நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்புத் தேடும் வகையில் தமக்குத் தாமே தணிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டதுடன் வேறு முன்னெச்சரிக்கையான நடைமுறைகளையும் கையாளவேண்டிய கடப்பாட்டிற்குள்ளாகியிருந்தனர். தம்மீதான தாக்குதல்கள், அவதூறுகள் என்பவற்றை தவிர்க்கும்விதத்திலேயே அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர். பத்திரிகையாளர்களுக்கெதிரான வன்முறைகள் உட்பட அவர்கள் பயமுறுத்தப்படுவது, கொலை செய்யப்படுவது போன்ற நடவடிக்கைகள் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் சர்வசாதாரணமாகக் காணப்பட்டிருந்தனர்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் ஊடகத்துறையினரது நடவடிக்கைகள் தொடர்பாக சூழ்நிலைகள் மோசமானதாகவே இருந்தன. சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் (ஐகுது) ஐரோப்பிய யூனியன் (நுஊ) மற்றும் சர்வதேச ஊடக ஒத்துழைப்புக்கான அமைப்பு ஆகியவற்றின் உதவியோடு இலங்கையில் ஊடகத்துறை சார்ந்த நிலபரம் தொடர்பாக ஆராய்வதற்காக 2009 நவம்பர் மாதம் சுயமான ஊடகத்துறை நடவடிக்கையொன்றில் இறங்கியிருந்தது. பத்திரிகையாளர்கள், ஊடகத்துறை சார்ந்த அமைப்புக்கள், என்பவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக சாதகமான சூழலை ஏற்படுத்துவதே இந்த ஆய்வு நடவடிக்கையின் நோக்கமாகும். இலங்கையில் இத்தகைய சர்வதேச ஊடக அமைப்புக்களை உள்ளடக்கிய நடவடிக்கை நான்காவது தடவையாக இடம்பெற்றதுடன், ஒவ்வொரு தடவையும் விரிவான முறையில் ஊடகத்துறை சார்ந்த அமைப்புக்களோடு இணைந்து செயற்படுவதாகவும் அமைந்திருந்தது. அக்டோபர் 2006, ஜுன் 2007, மற்றும் 2008 ஆண்டுகளில் மூன்று ஆய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றன. இவற்றின் முழுமையான அறிக்கை சர்வதேச ஊடக ஒத்துழைப்பு அமைப்பின் (ஐஆளு) இணையதளத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த அமைப்பே குறித்த ஆய்வு நடவடிக்கையின் பிரதான ஏற்பாட்டாளராக விளங்கியிருந்தது.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற சர்வதேச ஊடகப்பிரதிநிதிகளின் ஆய்வு நடவடிக்கையின்போது, இலங்கையில் பல்வேறு வட்டாரங்களைச் சேர்ந்தவர்களுடனும் தொடர்பாடல்கள் இடம்பெற்றதுடன், அவர்கள் அனைவரும் சுயாதீனமான, மற்றும் குறுக்கீடுகளற்ற ஓர் ஊடகத்துறையின் அவசியம் இலங்கையில் இருக்கவேண்டியதை வலியுறுத்தியிருந்தனர்.

அடுத்துவரும் ஆறு அல்லது பன்னிரெண்டு மாதங்களில் இடம்பெறவுள்ள அரசியல் ரீதியான போட்டியென்பது இலங்கையில் பத்திரிகை சமூகத்துக்கு வாய்ப்புக்களையும், அதேவேளை அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும் சூழ்நிலைகளைக் கொண்டதாகவே அமைந்திருக்கும். ஊடகத்துறை சார்ந்தவர்கள் தமது நடவடிக்கைகள் குறித்து மேலதிகமாக ஓர் இடைவெளியைக் கொண்டிருக்க உத்தேசித்தவர்களாக இருக்கின்றனர்.

இருப்பினும் எதிர்வரும் தேர்தலில் அரசியல் ரீதியான போட்டிகள் அதிகரித்த நிலையில் வன்முறைகளும் விரிவாக இடம்பெறுவதற்கான சூழலே பலமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

சர்வதேச ஊடகத்துறை பிரதிநிதிகளது இந்த அறிக்கை, இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற நிலையில் ஊடகத்துறையினர் எதிர்கொள்கின்ற சவால்களையும், அச்சுறுத்தல்களையும் கண்டறிந்ததாக இருக்கின்றது.

# 2 அரசியல் சூழ்நிலை

தமிழர்களது ஆயுதப்போராட்டம் முடிவுற்ற ஆறு மாதகாலத்தில், இலங்கையில் பொது மக்களின் அன்றாட வாழ்க்கையை சீர் செய்யும் விதத்தில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் சில விதிமுறைகள் அமுலுக்கு வந்தன. வடக்கே வன்னியில் போடப்பட்டிருந்த யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணக்கிராமங்களில் தஞ்சமடைந்தவர்களில் (ஐனுீளு), ஆறுமாதகாலத்தில் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட காலக்கெடுவுக்கமைவாக நிவாரணக்கிராமங்களில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

இறுதிக்கட்ட யுத்தம் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மிகக்கொடூரமான முறையில் இடம்பெற்றிருந்தவேளை இடம்பெயர்ந்த மக்கள் குறித்து இந்தியாவுக்கும், இலங்கை அரசுக்குமிடையே எட்டப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் ஆரம்பமாகியிருந்தது. இது போன்ற மீள்குடியேற்றம், மற்றும் புனர்வாழ்வு குறித்த உடன்பாடொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபன செயலாளர் நாயகம் பான்கீமூன் ஆகியோருக்குமிடையேயும் 2009 மே மாதம் எட்டப்பட்டிருந்தது.

வடபகுதியில் வாழ்கின்ற மக்கள் கொழும்பு வருவதற்கும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் செல்வதில் இருந்து வந்த கட்டுப்பாடுகள் கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதி நீக்கப்பட்டன.

கொழும்பையும் வடபகுதியையும் இணைக்கும் ஏ -9 நெடுஞ்சாலையில் பல்வேறு சோதனைச்சாவடிகள் இருக்கின்ற போதிலும் வடக்கிற்கும், தெற்கிக்குமிடையேயான நடமாடும் சுதந்திரம் மீளவும் நிலை நிறுத்தப்பட்டது.

ஆயினும் இப்போக்குவரத்துக் குறித்து கண்ணோட்டத்தைச் செலுத்தியவர்கள், பல குறைபாடுகளையும் கண்டறிந்துள்ளனர்.

ஆயினும் இதுபற்றி ஊடகத்துறையினருக்கு தெளிவான அறிவுறுத்தல்கள் இல்லாதிருப்பதுடன், வடக்கில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக செய்திகள், தகவல்களை சேகரிப்பதில் ஒரு நீண்ட இடைவெளியை அவர்கள் முகங்கொடுப்பவர்களாகவு மிருக்கின்றனர்.

இது தவிர யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதில் மற்றும் வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களைச் சென்று பார்வையிட்டு நிலபரங்களை ஆராய்வதில் ஊடகத்துறையினர் தொடாந்து சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, நிவாரணக்கிராமங்களுக்கு ஊடகத்துறையினர் சென்று வருவதில் காணப்படுகின்ற தடைகளை நீக்க சில காலம் செல்லும் எனத் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் அரசியல் நிலபரம், இராணுவத்தின் இறுதிக்கட்ட யுத்தத்தை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிராக (டுவுவுநு) நடத்திய இராணுவத்தளபதி தமது கூட்டுப்படைத்தளபதிப் பொறுப்பிலிருந்து இராஜினாமாச் செய்ததையடுத்து புதிய திருப்பத்தைப் பெற்றது. வெறுமனே ஒரு சம்பிரதாய பூர்வமான கூட்டுப்படைத் தலைமைப் பதவிக்கு யுத்தம் முடிவுற்ற மறுகணமே இராணுவத்தளபதி நியமிக்கப்பட்டிருந்தார். ஜெனரல் சரத் பொன்சேகா யுத்தம் முடிவுற்றதும் இலங்கை அரசு தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் ஊடகத்துறையினருக்கு அரிய தகவல்களைத் தருபவையாக இருந்தன.

ஆயுதப்படைகளின் பிரதம தளபதிப் பதவியிலிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கும், ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குமிடையே ஏற்பட்ட பிளவு குறித்த விடயம் அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி வெளியான சண்டே டைம்ஸ் (ளரனெயல வைஅநள) பத்திரிகையில் முதல்தடவையாக வெளியாகியிருந்தது.

இச்செய்தி எவ்வித கருத்துக் கண்ணோட்டங்களுக்கும் இடமளித்திருக்கவில்லை. ஆயினும் இரிதாலங்கா (ஐசனைய டுயமெய) என்றழைக்கப்படுகின்ற, ஜனதா விமுக்தி பெரமுன கட்சியினரால் வெளியிடப்படும் பத்திரிகை இத்தகவலை உறுதிப்படுத்தியிருந்தது.

தமது பதவிக்காலம் முடிவதற்கு இருவருடகாலம் முன்பதாகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் தமது எண்ணத்தை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்த நிலையில், இலங்கையின் தேர்தல் ஆணையாளர் தேர்தலை 2010 ஆம் ஆண்டு 26 ஆம் திகதி நடத்துவதற்கு நாள்குறித்துமிருந்தார்.

இதனையடுத்து இத்தேர்தல் தொடர்பான அரசியல் நடவடிக்கைகள் சூடுபிடிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. இதேவேளை பாராளுமன்ற தேர்தலுக்கான நாள் குறிக்கப்படாத போதிலும், பெரும்பாலும் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இத்தேர்தல் நடத்தப்படலாமென எதிர்பாக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையில் ஊடகத்துறை அவதானிகளைச் சந்தித்த சர்வதேச ஊடகத்துறையினர், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி யுத்தம் முடிவுற்ற நிலையில் அரசியல் சீர்திருத்தமொன்றை ஏற்படுத்தி தமிழ், முஸ்லிம் மக்களது அரசியல் ரீதியான பிர்சினைகளுக்குத் தீர்வுகாணும் நடவடிக்கை எதுவும்

ஆரம்பிக்கப்படாதிருப்பதைக் கண்டறிந்திருந்தது. இவ்விடயம் எவ்விதத்திலும் உரிய முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கவில்லை என்பதே பெரும்பாலான பத்திரிகையாளர்கள், அரசியல் அவதானிகள் ஆகியோரின் கணிப்பாக இருக்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தைத் தவிர்ப்பதில் அரசியல்வாதிகள் முனைப்பாக இருந்தனர். ஆயினும் 1977 ஆம் ஆண்டு முதல் அமுலில் இருந்து வருகின்ற நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவது பற்றியே பல்வேறு கோணங்களிலும் பேசப்படுவதாக இருக்கின்றது.

சிறுபான்மையினர் பிரச்சினை பற்றிக் குறிப்பிடுவதைவிட நிறைவேற்று திகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது பற்றியே அரசியல் முக்கியஸ்தர்கள் பிரஸ்தாபிப்பதனையும் சர்வதேச ஊடகத்துறையினர் அறிந்து கொண்டிருந்தனர்.

ஆளுங்கட்சியும் அதனது கூட்டுக்கட்சிகளையும் தவிர ஏனைய அரசியல் கட்சிகள் இவ்விடயம் பற்றிக் குறிப்பிடுபவையாக இருக்கின்றன. ஆயினும் ஆட்சியதிகார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்போது எந்தவொரு பதவிக்கு வரும் கட்சியும் நிறைவேற்றதிகார முறைபற்றிக் குறிப்பிடுவதில்லை.

பதவிக்கு வரும் எந்தவொரு ஜனாதிபதியும் சுயவிருப்பத்துடன் இந்த நிறைவேற்றதிகார ஆட்சிமுறையை நீக்க முயற்சிப்பதில்லை. இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பில் பெருமளவிலான அதிகாரம் நிறைவேற்றதிகார ஜனாதிபதியிடமிருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் தமது அதிகாரங்களைத் தடுக்கக்கூடிய

சட்டமூலங்களைத் தடுக்கக்கூடிய அதிகாரத்தையும் நிறைவேற்றதிகார முறை கொண்டுள்ளது.

இதைவிட அரசியலமைப்பு மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியமானதாகும். இத்தகைய பலத்தை எந்தவொரு அரசியல் கட்சியும் கொண்டிருப்பதாகவில்லை.



எதிரணி பொது வேட்பாளரும், முன்னாள் .ராணுவத்தளபதியுமான சரத் பொன்சேகா கொலை செய்யப்பட்ட சண்டெ லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்துகிறார்.

## 3 புதிய முக்கிய அம்சங்கள்

இலங்கையின் ஊடகத்துறை அண்மைக்காலங்களில் காத்திரமான முறையில் தனது பங்களிப்பை வழங்குவதாக இருக்கின்றது. அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி இலங்கையின் பிரபல ஆங்கில வாரப் பத்திரிகையான “சண்டே டைம்ஸ்” ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையே ஏற்பட ஆரம்பித்த கருத்து வேறுபாட்டைப் பற்றிப் பிரசுரித்திருந்தது.

இலங்கையின் பல்வேறு அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பிட்டதுடன், பலதரப்பட்ட முன்னணிக்கட்டுரையாசிரியர்களின் ஆக்கங்கள் உள்ளடக்கியதாக வெளிவரும் அக்கட்டுரை இவ்வாறு தனது முடிவுரையைக் கொண்டிருந்தது :-

எதிர்க்கட்சியினர் ஜெனரல் சரத்பொன்சேகாவுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும், யுத்தம் முடிவுற்றதன் பின்னர், தாம் உரிய வகையில் நடத்தப்படவில்லை எனக் கவலை கொண்டிருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவை எதிர்க்கட்சியினர் அணுகியிருக்க முடியுமெனவும் அரசாங்க உயர்மட்டத்தினர் கருதியிருந்தனர். ஜெனரல் பொன்சேகாவின் யுத்தத்துக்குப் பிந்திய கருத்துக்கள், நடவடிக்கைகளே அவரது புறக்கணிக்கப்பட்டமைக்கான காரணமாக இருக்கலாமெனவும் பலர் கருதினர். அதேசமயம்

அரசதரப்பும் கலவரமடைந்ததாகவே காணப்படுகின்றது. ராஜபக்ஷ அரசாங்கத்தின் உயர்மட்டத்தைச் சேர்ந்த ஒருவர் கச்சிதமாக இவ்வாறு கூறியிருந்தார். “ஜெனரல் பொன்சேகாவை விலக்கியோ அல்லது விலக்காமலோ அரசினால் இருக்கமுடியாது.”

எதிர்க்கட்சியனர் ஜெனரல் சரத் கொன்சேகாவை எதிரணியின் பொதுவேட்பாளராக நியமிக்கப்போவதில்லை. மாறாக அவரைப் பய்னபடுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது இரண்டாவது பதவிக்காலத்துக்காக அவர் போட்டியிடும் போது தலையிடியைக் கொடுக்க எதிரணியினர் முயற்சிக்கலாம்.

இத்தகவல் எவ்வித கடுமையான எதிர்விளைவையும் ஏற்படுத்தாத வகையில் வெளியாகியிருந்தது. ஆயினும் இதே தகவலை வாராந்த சிங்கள மொழிப்பத்திரிகையான இரிதா லங்கா (ஐசனைய டுயமெய) வெளியிட்டபோது உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்பத்திரிகையின் ஆசிரியரான சந்தன சிறிமல்வத்த அக்டோபர் மாதம் 16 ஆம் திகதி பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். மேற்படி தகவலைப் பிரசுரித்தது பற்றி விசாரணை செய்வதற்காக அவர் குற்றப்புலனாய்வுத்துறையின் தலைமையகத்துக்கு வரவழைக்கப்பட்டிருந்தார். அவர் அந்த அழைப்பை ஏற்க மறுத்ததையடுத்து, குற்றப்புலனாய்வுப்பிரிவினர் மறுதினமும் அவரிடம் வந்திருந்தனர். இத்தடவை அவரால் மறுப்பெதனையும் தெரிவிக்க முடியவில்லை. இதனையடுத்து அவர் சுமார் மூன்று மணி நேரம் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் உடனடியாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்காரவினால் பத்திரிகைகளுக்கு அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையில் பிரத்தியேககாரணங்களுக்காகவோ, அல்லது அரசியல் ஆதாயத்துக்காகவோ சேவையிலிருக்கும் படையதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிடக்கூடாதென எச்சரிக்கை செய்யப்பட்டது.

அத்துடன் அரசியலில் ஈடுபட்டுள்ள சில தனிப்பட்ட நபர்கள், மேற்படி படையதிகாரிகளின் பெயர்களை ஆதாரமற்ற தகவல்களின் அடிப்படையில் பயன்படுத்துவதாகவும், இதன்காரணமாக அவசரகாலச்சட்டம், குற்றவியல் சட்டம், மற்றும் இராணுவ சட்டக்கோவை, ஆகியவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படமுடியுமெனவும், அந்த அறிக்கை மேலும் எச்சரித்திருந்தது.

இது தவிர சீருடை தரித்த இராணுவ அதிகாரிகள் அரசியலில் ஈடுபடுவதற்கு அனுமதி இல்லை எனவும், “ தவறானஅறிக்கை” களில் அவர்களது பெயர்கள் இடம்பெறமுடியாதெனவும், அவ்வாறு ஈடுபட்டார்களேயானால், சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட முடியுமெனவும், பாதுகாப்புத்துறைச் செயலாளரின் அந்த அறிக்கை கூறியிருந்தது. அத்துடன் அதிகாரிகளை உடனடி நடவடிக்கைகளை இது குறித்த எடுக்க வேண்டுமெனவும் பணிக்கப்பட்டிருந்தது.

ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவும் எச்சரிக்கையொன்றை விடுத்திருந்தார். பொறுப்பற்ற விதத்தில் இணையத்தளங்கள் ஊடகநிறுவனங்கள் செயல்பட்டு ஸ்திரமற்ற நிலையை நாட்டில் ஏற்படுத்த முனைகின்றன என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார். பொறுப்பற்ற விதத்தில் செயல்படும் இணையத்தளங்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் கூறியிருந்தார். இந்த இணையத்தளங்கள் அரசாங்கத்துக்கும், ஏனைய தரபப்பினருக்குமிடையே பிளவுகளை ஏற்படுத்த முயலுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் தெரிவித்த கருத்தில், மேற்குறிப்பிட்ட இணையத்தளங்கள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்று அரசு தெரிவித்தது. ஊடகத்தறையை ஒடுக்கிவைப்பதிலிருந்தும் வேறுபட்டதாக, தவறான தகவல்களிலிருந்து சமூகத்தினைக் காப்பது போலவும், இந்த அறிவிப்புக் காணப்பட்டது.

இதேவேளை அரசியலில் இடம்பெற ஆரம்பித்த மாற்றங்களால் குழப்பமடைந்த ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ, கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவத்ததாவது : “ ஊடகத்தறைக்கு அரசாங்கத்தை விமர்சிக்கவும் விரும்பிய கட்சிக்கு ஆதரவளிக்கும் உரிமை இருக்கின்றபோதும், பொய்யான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதை அனுமதிக்க முடியாது” எனக் கூறியிருந்தார்.

அதேசமயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குமிடையே யுத்தம் முடிவுற்றதும் ஆரம்பித்த விரிசல் மேலும் விரிவடையத் தொடங்கியது. இருவரும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த நம்பிக்கை சிதைவடைய ஆரம்பித்தது. இது பற்றிக் குறிப்பிட்ட எந்தவொரு ஊடகமும் இலங்கை அரசாங்கத்துடன் பதட்டமான நிலைக்குத் தள்ளப்படும் சூழ்நிலைகளை எதிர்நோக்கின. ஆயினும் ஊடகத்துறையை ஒரு பலிக்கடாவாக மாற்ற அரசாங்கம் முயற்சிக்கின்றது என்ற அபிப்பிராயத்தை முற்றிலுமாக களைந்தெறியமுடியாதிருந்தது.

நவம்பர் மாதம் 13 ஆம் திகதி தமது கூட்டுப்படைத்

தளபதிப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யும் விருப்பத்தை அறிவித்து ஜெனரல் பொன்சேகா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம், ஊடகத்துறைக்கு அதுவரை காலம் மறைத்தவற்றை உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதப்படுத்தியது.

பொன்சேகாவின் இராஜினாமா உடனடியாகவே ஏற்றக்கொள்ளப்பட்டதுடன், நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அவருக்கு இராணுவத் தலைமையகத்தில் ஒரு பிரியாவிடை அணிவகுப்பும் எற்பாடாகியிருந்தது.

இவ்வைபவத்துக்கு ஏனைய முப்படைத்தளபதிகள் சமூகமளித்திருக்கவில்லை. இவ்வைபவம் பற்றித் தகவல் சேகரிக்க வந்திருந்த ஊடகவியலாளர்கள் நீண்ட நேரம் வைபவம் இடம்பெற்ற இடத்துக்கு வர அனுமதிக்கப்படவில்லை. அத்துடன் அவர்கள் உள்ளே வர அனுமதிக்கப்பட்டபோது அவர்களால் அவ்வைபவத்தின் இறுதிக்கட்டத்தின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே காணமுடிந்தது.

டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி, மூன்று மனுக்களை உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக பொன்சேகா தாக்கல் செய்திருந்தார். இம்மனுக்கள் இலங்கையின் அரசியலமைப்புக்கமைவானதாக அமைந்திருந்ததுடன், அரச ஊடகங்கள் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் குறித்து பக்கச்சார்பாக நடந்து கொள்வதாகவும், அம்மனுக்களில் குறிப்பிட்டிருந்தார்.

அம்மனுக்களில் அரச தொலைக்காட்சிச் சேவைகளான ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், ஐ.ரி. என் என்றழைக்கப்படுகின்ற சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவை ஆகியவையும், அசோசியேட்டட் நியுஸ்பேப்பர் ஒவ் சிலோன் லிமிட்டட் (யுஹேஊடு) அல்லது லேக்ஹவுஸ் என்றழைக்கப்படுகின்ற அரசபத்திரிகை நிறுவனமும் குறிப்பிடப்பட்டிருந்தன.

பொன்சேகா தமக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் இந்த மூன்று ஊடகநிறுவனங்களும் இயங்குவதாகக் குறிப்பிட்டதோடு, தேர்தல் ஆணையாளர், மற்றும் ஆளுங்கூட்டணிக் கட்சித் தலைமையையும் அம்மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

யுத்தம் முடிவுற்ற தினத்திலிருந்து, இராணுவ வெற்றியின் மூல காரணகர்த்தா தாமே என்ற நிலைப்பாட்டை தமது அரசியல் வெற்றிகளின் பொருட்டு உறுதியாகக் கொண்டிருக்க ஜனாதிபதி உத்தேசித்திருந்தார். எனவே இந்த நிலைப்பாட்டுக்கு எதிராக கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிட்ட ஊடகத்துறையினர் மீது கடும் போக்கே கடைப்பிடிக்கப்பட்டது.

செப்டெம்பர் 2 ஆம் திகதி இரிதா லங்கா என்ற சிங்கள வாரப்பத்திரிகையின் மூன்று பத்திரிகையாளர்கள் தெனியாயப் பிரதேசத்தின் தென்பிரதேசத்தில் கைது


Post war
And now they come for us
THE WAY WITH COWARDS

அக்டோபர் 25 த சண்டே லீடர் பத்திரிகையின் முன்பக்கம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட யுத்தகள கொலைகள் பற்றிய படத்தைப் பிரசுரித்துள்ளது.

செய்யப்பட்டனர். இவர்களின் கைதுக்கான காரணம் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. ஆயினும் கடுமையான பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் கைதாகியிருக்கலாமென்றே கருதப்பட்டது. இக்கைது இடம்பெற்று குறிப்பிட்ட சில தினங்களில் இலங்கையின் சிரேஷ்ட பத்திரிகையாளரும், அடிப்படை மனித உரிமைகளுக்கு குரல் கொடுத்தவருமான ஜே. எஸ். திஸ்ஸநாயகம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இருபது வருட கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்.

ஆயினும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட இரிதா லங்கா வாரப்பத்திரிகையின் மூன்று பத்திரிகையாளர்களும், அவர்கள் கைதாகி ஆறு தினங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களது கைது ஜனாதிபதியின் குடும்பத்தவரது ஒரு காணி நிலம் பற்றிய விடயத்தை மையமாகவே கொண்டிருந்ததுடன், குறித்த அச்சொத்தைப் பெற்றுக்கொள்வதில் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட மோசடிகள் பற்றி புலனாய்வுச் செய்தி ஒன்றைத் தயாரிப்பதில் இம்மூன்று செய்தியாளரது பத்திரிகையான இரிதா லங்கா ஈடுபட்டுமிருந்தது.

நடந்து முடிந்த யுத்தத்தின் கச்சிதமான தகவல்கள், குறிப்பாக யுத்தத்தின் இறுதிக்கட்ட

நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படுவது ஊக்குவிக்கப்பட்டிருக்கவில்லை.

பல்வேறு சர்வதேச அரங்குகளில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அப்பாவிப் பொதுமக்கள் கண்மூடித்தனமாக குறிவைக்கப்பட்டதாகத் தெரிவித்து கடுமையான விமர்சனங்கள் வெளியாகியிருந்தன. இருந்தபோதிலும் இந்த விமர்சனங்களை இலங்கை அரசாங்கம் பல்வேறு உத்திகளையும் கையாண்டு மறுத்திருந்தது. இந்தியா, சீனா ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் யுத்தக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் இடம்பெறுவதையும் இலங்கை அரசாங்கம் தவிர்த்திருந்தது.



2008 அக்டோபரில் இலங்கைக்கு பயணம் செய்த சர்வதேச ஊடக பிரதிநிதிகள் குழுவுடன் மறைந்த சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க உரையாடும் காட்சி.

எப்படியிருந்தபோதிலும் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது காணப்பட்ட சிதைக்கப்பட்ட சடலங்களை மையமாக வைத்து சர்வதேச சிவில் அமைப்புக்கள் நம்பகத்தன்மை வாய்ந்த ஆதாரங்களைச் சேகரிப்பதிலேயே முனைப்பாக இருந்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் (ருரேஊசு), இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற யுத்தக்குற்றச் சாட்டுக்கள் குறித்து முழு அளவிலான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென சுட்டிக்காட்டியிருந்தது.

ஐரோப்பிய யூனியன் விரைவான மறுவாழ்வுப்பணிகள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் குறித்து எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தது. கூடவே ஜி. எஸ். பி. ூ (புளுீ) வரிச்சலுகையை இலங்கை ஐரோப்பிய யூனியனிடமிருந்து தொடர்ந்து பெற வேண்டுமானால் கூடியவரையில் அடிப்படை மனித உரிமைகள் குறித்த நடைமுறைகளை இலங்கை அரசாங்கம் கைக்கொள்ள வேண்டுமெனவும் ஐரோப்பிய யூனியன் சுட்டிக்காட்டியிருந்தது. பூர்வாங்க விசாரணையொன்றை ஐரோப்பிய யூனியன் இலங்கையில் மேற்கொண்டதுடன் ஜி. எஸ். பி. வரிச்சலுகையை மேலும் நீடிப்பதற்கு இலங்கை தகுதியுடையதல்ல எனக்குறிப்பிட்டதோடு, இலங்கையின் பதிலுரைக்கும் கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அதேசமயம் ஐரோப்பிய யூனியன் தனது இறுதிக்கட்ட முடிவுகளை இலங்கையின் பதிலுரை கிடைக்கப்பெற்று இருமாதகாலங்களில் வெளியிடுமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வெளிநாடுகளில் புகலிடம் கோரியுள்ள இலங்கைப் பத்திரிகையாளர்கள் குழுவொன்று இலங்கையின் உடக சுதந்திரத்தை ஜி. எஸ். பி. ூ சலுகையை நீடிப்பதற்கான ஒரு முக்கிய நிபந்தனையாக அறிவிக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டிருந்தது.

## ஏற்கப்படமுடியாத உண்மைகளா அல்லது கட்டுக்கதையா?

இதேசமயம் கடந்த ஆகஸ்ட் மாதம் அப்பாவி தமிழ் சிவிலியன்கள் குறிப்பாக ஆண்கள் வடபகுதியில் படையினரால் துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொல்லப்படுவது போன்ற வீடியோ நாடாக்கள் வெளியானமை இலங்கையின் அரச வட்டாரங்களில் குறிப்பிடத்தக்களவு ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த வீடியோ நாடா பிரிட்டன் சனல் - 4 என்ற தொலைக்காட்சிச் சேவையினரால் வெளியிடப்பட்டிருந்தது. அத்துடன் விரிவான முறையில் வெளிநாட்டு ராஜதந்திர வட்டாரத்தினால் பார்க்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்த வீடியோ நாடாவில் வெளியான காட்சிகள் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக உத்தியோகபூர்வமாக இதுவரை விசாரணை எதுவும் கோரப்படவில்லை. இத்தகைய கோரிக்கையை இலங்கை அரசாங்கம்

பூரணமாக நிராகரிக்கும் என்று இராஜதந்திர வட்டாரங்கள் நன்கறிந்திருந்தன. ஆயினும் இலங்கை இராணுவத்தின் இறுதிக்கட்ட யுத்த நடவடிக்கைகளை ஆராய்வதானது இலங்கை அரசின் கீர்த்திக்கு எவ்வித தீங்கையும் ஏற்படுத்தாது என பவ்வியமான முறையில் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதேசமயம் இலங்கை அரசாங்கம் மேற்படி வீடியோ நாடா தொடர்பாக ஜெர்மனியில் உள்ள அதன் தூதரகத்தைத் தொடர்பு கொண்டு அங்கே பொலிஸாரின் உதவியோடு அவ்வீடியோ நாடாவை தயாரித்ததாகக் கூறப்படும் புகலிடம் கோரி வாழுகின்ற பத்திரிகையாளர்களை இனங்காணும்படியும் கேட்டிருந்தது.

இவ்விகாரம் தொடர்பாக அரச தரப்புக் கொண்டிருந்த மனப்போக்கை வெளிப்படுத்துவதாக அரசசார்பான ஆங்கில வாரப்பத்திரிகையான சண்டே ஒப்சேவரில் செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி நீண்ட அறிக்கையொன்று வெளியாகியிருந்தது. அதில் நிபுணத்துவ ஆய்வில் அவ்வீடியோ நாடாபோலியானதெனக் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. புகலிடம்கோரி வாழுகின்ற பத்திரிகையாளர்கள் சிலரது சதி நாசகார வேலையாகவே இந்த வீடியோ நாடாவில் வெளியான விபரங்கள் இருக்குமெனவும் இலங்கை அரசு தெரிவித்ததோடு அது குறித்த

மூலாதாரத்தையும் அதனைத் தயாரித்தவர்கள் பற்றிய விபரங்களையும் கண்டறிவதற்கான விசாரணைகளும் இலங்கை அரசாங்கத்தினால் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக சண்டே ஒப்சேவர் செய்தியறிக்கை தெரிவித்திருந்தது. அக்டோபர் மாதம் 18 ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகை உண்மையானதா ? அல்லது தவறானதா ? என்ற வகையில் முன்பக்கச் செய்தியொன்றை வெளியிட்டிருந்தது.

“சர்ச்சைக்குரிய வீடியோ நாடாவில் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் இராணுவ சீருடை அணிந்தவர்களால் சுடப்பட்டு கொல்லப்படுவது போல சித்தரிக்கப்பட்ட காட்சி குறித்த அறிக்கை அமெரிக்க ராஜாங்க திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன், பகுப்பாய்வுத்துறையில் நிபுணத்துவம்மிக்க அமெரிக்க கம்பனி ஒன்று அக்குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய சனல் -4 விடியோ நாடாவை எவ்வகையிலும் குளறுபடியானதாகவோ அல்லது மாற்றியமைக்கப்பட்டதாகவோ இருக்கவில்லை என்பதை உறுதி செய்தது.

அக்டோபர் 22 ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகையின் செய்தி ஆசிரியரான முன்ஸா முஸ்டாக் அப்பத்திரிகையின் ஆசிரியரான பிரெட்ரிக்கா ஜான்ஸ் ஆகியோர் குறிப்பிட்ட சனல் - 4 அறிக்கை குறித்து ஒரே விதமாக எழுதப்பட்ட பயமுறுத்தல் கடிதமொன்றினால் எச்சரிக்கப்பட்டிருந்தனர். அக்கடிதத்தில் அவர்கள் இருவர் அந்த அறிக்கையை மீள் பிரசுரித்தால் துண்டு, துண்டுகளாக வெட்டிப் படுகொலை செய்யப்படுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டிருந்தனர். மேற்படி அறிக்கை சண்டே லீடர் செய்தி அசிரியர் முன்ஸா முஸ்டாக் என்பவரது பெயரிலேயே வெளியாகியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த எச்சரிக்கைக் கடிதத்தை சண்டே லீடர் நிர்வாகம் கையெழுத்து நிபணர் ஒருவரது பரிசீலனைக்கு அனுப்பிவைத்திருந்தது. அந்த நிபணர், அக்கடிதம் பெரிதும் சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி கொலை செய்யப்படுவதற்கு முன்பதாகப் பெற்றிருந்த கொலை மிரட்டல் கடிதத் பாணியிலேயே பெரிதும் ஒத்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

சண்டே லீடர் பத்திரிகை அக்டோபர் 25 ஆம் திகதி கட்டுரையொன்றைப் பிரசுரித்திருந்தது. அதில் இதேபோன்ற மிரட்டல்கள், கடிதங்கள் என்பவை கடந்த காலங்களில் பெறப்பட்டதையும் சுட்டிக்காட்டியதுடன், தமது மறைந்த ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொள்கைகளுக்கமைவாக துணிச்சலுடன் செயற்படுவதை எச்சரித்தே இந்த மிரட்டல்கள் வருவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தது. அக்கட்டுரையில் பாதுகாப்புத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 2006 ஆம் ஆண்டு பிரசுரமான கட்டுரையொன்றுக்கெதிராக சண்டே லீடர் பத்திரிகை மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டதையும் சுட்டிக்காட்டியிருந்தது.

இக்கட்டுரை 2006 ஆம் அண்டு கொள்வனவு செய்யப்பட்ட போர் விமானங்கள் குறித்து கோத்தபாயவுக்கு இருந்த தொடர்புகளை சுட்டிக்காட்டியிருந்தது.

அதேசமயம் பெறுமனே பாதுகாப்புச் செயலாளரது பெயர் மட்டுமே அந்த செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டமை காரணமாக, இலங்கை நாணயப்படி ஒரு பில்லியன் ரூபா நஷ்டஈடு கோரியும் சண்டே லீடர் பத்திரிகை மீது சட்ட நடவடிக்கைக்கான கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

**இடம்பெயர்ந்தோர் பற்றிய தகவல்களை வெளியிடுவது, ஒரு மௌனத்துக்குரிய சமாச்சாரமாகவே விளங்கியிருந்தது.**

சர்வதேச ஊடகத்துறையினர் சந்தித்த பத்திரிகைத்துறைப் பிரமுகர்கள், இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்த செய்தி அறிக்கைகள் போதுமானளவு தகுந்த தகவல்களைக் கொண்டிராதவையாக இருந்தன என்று தெரிவித்திருந்தனர்.

பொதுவாகப் பார்க்குமிடத்து இடம்பெயர்ந்து, நிவாரணக்கிராமங்களில் வாழுகின்ற மக்கள் தொடர்பாக தமிழ் பத்திரிகைகளே அதிகளவு கரிசனையையும் வெளிப்படுத்தின ஆங்கிலப் பத்திரிகைகள் ஓரளவு கரிசனையையும், சிங்களப் பத்திரிகைகள் மிகச் சிறியளவிலான தகவல்களையும் வழங்கியிருந்தனர்.

தமிழ் பத்திரிகைகளைப் பொறுத்தவரை நியூ உதயன் குழுமத்தைச் சேர்ந்த கொழும்பிலும். யாழ்ப்பாணத்திலுமாக வெளியிடப்படுகின்ற உதயன். சுடரொளிப் பத்திரிகைகளே குறிப்பிடத்தக்களவு இடம்பெயர்ந்த மக்களது பிரச்சினைகள் குறித்த தகவல்களை வெளியிட்டதுடன், நிவாரணக் கிராமங்களுக்குள்ளேயே இருக்கின்றவர்கள் மூலமாகத் தகவல்களைச் சேகரித்து, அவர்களது பெயர்களைக் குறிப்பிடாது செய்தி அறிக்கைகளை இந்த இரு பத்திரிகைகளும் வெளியிட்டன.

ஆங்கில வாரப்பத்திரிகையான சண்டே டைம்ஸ் தனது செப்டெம்பர் 6 ஆம் திகதி பதிப்பில்

இடம்பெயர்ந்தோர் நிவாரண முகாம்கள் பணத்துக்காக அங்குள்ளவர்களை வெளியே கூட்டிச் செல்வது உட்பட, அங்கு பணியாற்றும் அதிகாரிகளது லஞ்சம், பணமோசடிக்குரிய வாய்ப்பான பகுதிகளாக இருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருந்தது. இம்முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்தோர், பணக்கையாடல்களுக்காகப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றனர் எனவும் சண்டே டைம்ஸில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேசமயம் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் பற்றிய மக்கிய தகவல்களைத் தந்த

சண்டே டைம்ஸின் மன்னார், வவுனியா செய்தியாளர்கள், சிங்களப் பத்திரிகைகளில் பெருமளவு இது குறித்த தகவல்கள் பெரிதும் வெளியாகாத காரணத்தினால், முகாம் நிலபரம் குறித்த தகவல்கள் பெருமளவிலான மக்களை சென்றடையாதிருந்ததெனக் குறிப்பிட்டிருந்தனர்.

பிரஜைகள் இணையத்தள களநோக்கு (றறற. பசழரனெளநைறள.ழசப) நிவாரணக்கிராமங்கள் தொடர்பாக பல தகவல்களை முதலில் தந்திருந்தது. இந்த இணையத்தளம் உள்நாட்டிலும் மற்றும் சர்வதேச ரீதியாகவும், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நிலவுகின்ற மனித அவலங்கள் தொடர்பாகவும், ஆகஸ்ட், அக்டோபர் மாதங்களில் பெய்த கடும் பருவ மழையினால் இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்குள் நிலவிய சீர்கேடுகளையும் தெளிவாகத் தந்திருந்தது. அத்துடன் இலங்கையின் முக்கிய ஊடகத்துறையினர் இந்த அவலங்கள் குறித்துக் கொண்டுள்ள நிலைப்பாடு பற்றியும் அவ் இணையத்தளம் சுட்டிக்காட்டியிருந்தது.

“இலங்கையின் முக்கிய ஊடகத்துறையினர் இந்த நிவாரணக் கிராம அவலங்கள் பற்றிக் கரிசனைப்படுகிறார்களா ? இந்த ஊடகத்துறையினரில் எவராவது இம்முகாம்களில் உள்ளோரது நிலைமை சம்பந்தமாக பாதுகாப்பமைச்சில் இடம்பெயர்ந்தோரது நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்களைத் தட்டிக்கேட்னரா ?

கையடக்கத் தொலைபேசிகள் மூலமான குறுந்தகவல்கள் (எஅஎ) கிரிக்கெட் பந்தய செய்திகளை நிமிடத்துக்கு நிமிடம் தந்தவையாக இருக்கின்றன. ஆனால் நிவாரணக் கிராம விடயங்களை அக்குறுந்தகவல்கள் இருட்டடிப்புச் செய்தவையாகவே காணப்பட்டன. மெனிக்பாம் நிவாரணக் கிராமத்தில் நிலவிய வெள்ளச் சீர்கேடு பற்றி மூன்று தினங்கள் வரை இந்த குறுந்தகவல்கள் மௌனம் சாதித்தன தமிழ் ஊடகத்துறை மட்டுமே இந்த அனர்த்தத்தை வெளிப்படுத்தியிருந்தது.

சிங்களப் பத்திரிகைகள் வெட்கப்படத்தக்கவகையில் தமது பதிப்புக்களில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள அவலங்கள் பற்றிக் குறிப்பிடுவதை தவிர்த்திருந்தன. அவை முன்பக்கத்தில் இது பற்றி எதனையும் குறிப்பிட்டிருக்கவில்லை.

பல்வேறு செய்தித் தகவல்கள் நிவாரணக் கிராமங்களில் நிலவும் மனித அவலங்களை விரிவாகக் குறிப்பிட்டிருந்தன. அவற்றின் இடம்பெயர்ந்த மக்களுக்காக அமைக்கப்பட்ட மலசலகூட வசதிகளின் சீரற்ற தன்மை, வெள்ள நீரோடு மனிதக்கழிவுகள் கலந்து முகாம்களுக்குள் புகுவதால் எற்படும் தொற்று நோய்கள், முகாம் கூரைகளின் சீரற்ற தன்மைகள் உணவு சமைப்பதற்கான உலர்உணவு வகைகளோ, சமையலுக்கான விறகு என்பவை பற்றாக்குறை என்பவை பற்றியும் பல தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் இவைபற்றி சிங்ளகப்பத்திரிகைகள் அதிகளவு முக்கியம் தராதமையால் தென்பகுதி மக்கள் நிவாரணக் கிராமங்கள் பற்றி அறியாதவர்களாகவும் தென்பகுதியிலுள்ளோர் இந்த அவலங்கள் பற்றித் தட்டிக் கேட்க முடியாத நிலையும் காணப்பட்டதாக இருந்தது. ” என்ற தகவல் மேற்படி இணையத்தளம் வாயிலாக வெளியாகியிரந்தது.

இடம்பெயர்ந்த முகாம்களில் காணப்படும் நிலபரம் பற்றிக் குறிப்பிடுவதில் முக்கிய பத்திரிகைகள் அமைதி பேணியிருந்தன.

எனவே பிரதான ஊடகத்துறையினர் அமைதி பேணிய அதேசமயம் களநோக்கு இணையத்தளம் மற்றுமொரு அறிக்கையைத் தயாரித்தது. முகாம்களிலிருந்து வெளியேறி தமது சொந்த இடங்களுக்கு மீளவும் சென்று குடியேறிய இடம்பெயர்ந்த மக்களை இவ் இணையத்தளம் பேட்டி கண்டிருந்தது.

அப்பேட்டியில் மீளவும் தமது சொந்த இடங்களுக்கு இடம்பெயர்ந்து வந்தவர்கள் தமது வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இந்த இணையத்தளம் கண்டறிந்திருந்தது. இந்நிலையில் பிரதான ஊடகங்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்களது மீள்குடியேற்றம் குறித்து அமைதி பேணிய தருணத்தில் இவ் அறிக்கையை வெளியிட்டது.




போத்தல ஜயந்த மீது நடத்தப்பட்ட கடுந்தாக்குதலை பத்திரிகையாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்து எதிர்க்கும் காட்சி.

பெருமளவு குடும்பங்கள் தமது குடும்பத்தலைவனை அல்லது தலைவியைப் பறிகொடுத்த நிலையிலும், பலவந்தமாகப் பலர் கைது செய்யப்பட்ட நிலையிலும் மீள்குடியேற வந்த இந்த இடம்பெயர்ந்த மக்களது நிலை மிகவும் கவலைக் குரியதாகவே இருந்தது. நாமும் இதனை நன்கு உணர்ந்திருந்தோம். பல குடும்பங்கள் பெண்களுடனும், மிக இளம் குழந்தைகள் மற்றும் வயோதிபர்கள் என்ற நிலையில் நாதியற்ற கோலத்திலிருந்தன. போதியளவு அடிப்படை வசதிகளின்றி (தகுந்த குடிமனை, வைத்தியசாலைகள், போக்குவரத்து, பாடசாலைகள் குடிநீர், மின்சாரம் வாழ்வாதார நடவடிக்கைகள்) கூடவே சுதந்திரமாக நடமாடும் உரிமை என்பவற்றை இழந்த நிலையில் மீளவும் சொந்த இடங்களில் குடியேறுவதென்பது இந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு எதனை அர்த்தப்படுத்துவதாக இருகின்றதென்றே ஒருவரால் எண்ணக்கூடியதாக இருந்தது.

## 4 கடந்தகால துஷ்பிரயோகங்கள்

### லசந்த விக்கிரமதுங்கவின் கொலை

கடந்த ஆண்டு பட்டப்பகலில் பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட நிலையில் உதயமானது. அவரது பாணியிலான செய்தித்துறை நடவடிக்கைகள் அவரை இலங்கையில் ஒரு நன்கறிந்த பத்திரிகையாளராக மிளிரச் செய்திருந்தது. ஆயினும் அவரது கொலை நிருபிக்கப்படமுடியாதொன்றாகவே அமைந்திருந்தது. லசந்தவின் கொலை விசாரணை தொடர்பாக பாரபட்சம் நிலவியதை அவரது சகோதரரான லீடர் பதிப்பகத்தின் தலைவர் லால் விக்கிரமதுங்க எடுத்துக் கூறியிருந்தார். “இரு வாரங்களுக்கு ஒரு தடவை லசந்த கொலை விவகாரம் நீதிமன்ற விவகாரத்துக்கு வரும். ஆனால் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதில் அசமந்தப்போக்கே நிலவியது.

விசாரணை நடைமுறைகளில் பல்வேறு தவறுகள் குளறுபடிகளும் காணப்பட்டன. கொலை தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கை கல்கிஸ்ஸை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கொலை இடம்பெற்ற மறுகணம் நடந்தேறிய விசாரணையை மையமாக வைத்தே நீதிமன்ற விசாரணை நடத்தப்பட்டது. அந்த உடனடி ஸ்தல விசாரணையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களே கொலைக்கான காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இத்தகவல் நம்பத்தகுந்த சாட்சிகளின் அடிப்படையில் தவறானதாகும். ஏனெனில் லசந்த விக்கிரமதுங்க கொழும்பு களுபோவில வைத்தியசாலையில் சம்பவ தினம் ஜனவரி 8ஆம் திகதி அனுமதிக்கப்பட்டபோது அவரைப் பரிசோதித்த டாக்டர் கொடுத்த அறிக்கைக்கு எதிர்மாறானதாகவும் மேற்படி ஸ்தல விசாரணைத் தகவல்கள் விளங்கியிருந்தன.

லசந்த விக்கிரமதுங்கவின் சட்டரீதியான நலன்களைப் பேணுவதற்கான நடவடிக்கைகள்

எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆனால் இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச ஊடகபிரதிநிதிகள் பொலிஸ் தரப்பில் இருந்து சேகரித்த தகவல்களை நோக்குமிடத்து லசந்தவின் கொலை குறித்த விபரங்கள் அவர்களிடம் வெளிப்படையாக கையளிக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதை அறிய முடிந்தது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி லசந்தவின் கொலையில் துப்புத்துலக்குவதில் புதிய தகவல்கள் வெளியாகியிருப்பதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார். இதனையடுத்து இரு முச்சக்கரவண்டி சாரதிகளை பொலிஸார் கொழும்பில் கைது செய்தனர். அவர்களில் ஒருவரிடம்

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டபோது அவரிடமிருந்த கையடக்கத் தொலைபேசி காணப்பட்டது. அந்நபர் உடனடியாகவே விடுதலை செய்யப்பட்டார். இரண்டாவது நபரிடமிருந்து அக்கையடக்கத் தொலைபேசியைத் திருடியதாகத் தொரிவிக்கப்பட்டது. இச்சந்தேகநபர் பெரேரா. இந்த அறிக்கை தயாராகும்போது கூட விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்தார். எனவே அவர் மீது சுமத்தப்படக்கூடிய மிகக் கடுமையான குற்றச்சாட்டு திருட்டுக்குரியதாகவே இருக்குமென நம்பப்பட்டது.

நவம்பர் 13 ஆம் திகதி லசந்த கொலைவழக்கின் 24 ஆவது வழக்கு விசாரணையின்போது, சுகத பெரேரா மீதான விசாரணை எவ்வித ஆக்கபூர்வமான தகவல்களையும் கொலைகுறித்துத் தரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பிரதான நீதிபதி பெரேராவின் விளக்கமறியலை நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வரை நீடிக்குமாறு பணித்ததோடு புலன் விசாரணைகளின் நிலபரத்தை அத்தினத்தில் நீதிமன்றத்தில் அறிவிக்கும்படியும் கேட்டிருந்தார்.

அடுத்த விசாரணையின்போது லசந்த விக்கிரமதுங்கவின் குடும்பம் சார்பாக ஆஜரான சட்டத்தரணி நடந்து முடிந்த விசாரணைகளில் தமது தரப்புக்குத் திருப்தியில்லை எனக்குறிப்பிட்டு சி. ஐ. டி பொலிஸாரிடம் நீதிமன்றம் விசாரணைகளைக் கையளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். ஆனால் அரசதரப்பு சட்டத்தரணி சுகத பெரேரா எவ்வாறு கையடக்கத் தொலைபேசியைப் பெற்றுக் கொண்டார் என்று விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இந்நிலையில் நீதிமன்றம் அச்சட்டத்தரணியிடம் பொலிஸ் விசாரணைகளிலிருந்து சி. ஐ. டி. விசாரணைக்கு மேற்படி வழக்கை மாற்றுவது பற்றி பொலிஸ்மா அதிபரிடம் ஆராய்ந்து பார்க்குமாறு கேட்டிருந்தது. டிசம்பர் 10 ஆம் திகதி சி. ஐ. டி.. பொலிஸாரிடம் வழக்கு விசாரணைகள் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இந்நிலையில் லசந்த கொலை வழக்கு அது ஆரம்பமான பூர்வாங்க நிலையில் இருப்பதே

கண்கூடு. லசந்த விக்கிரமதுங்கவின் விதவையான சொனாலி விக்கிரமதுங்க, சி. ஐ. டி. யினரிடம் விசாரணைகள் கையளிக்கப்படவேண்டுமெனக் கேட்டிருந்ததோடு சர்வதேச பகுப்பாய்வாளரது உதவியும் கோரப்படவேண்டுமெனக் கேட்டிருந்தார். கொலை இடம்பெற்று

ஒரு வாரகாலத்தில் அவர் விடுத்த இந்த வேண்டுகோள் மீளவும் பெப்ரவரி 18 ஆம் திகதி இடம்பெற்ற விசாரணையின்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. பின்னர் மாாச் 15 ஆம் திகதி சொனாலி விக்கிரமதுங்க இலங்கையின் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்ததோடு அவரும், அவரது அமைச்சர்கள் பலரும் கொலை தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படுமென்று குறிப்பிட்டதையும் சுட்டிக்காட்டியிருந்தார்

ஜனவரியில் ஊடகத்துறை மீது மேற்கொள்ளப்பட்ட மூன்று முக்கிய தாக்கதல்களில் விக்கிரமதுங்க மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் ஒன்றாகும்.

அதேசமயத்தில் கொழும்பிலுள்ள சிரச தொலைக்காட்சி நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், மற்றும் உபாலி தென்னக்கோன் என்பவர் மீது நடத்தப்பட்ட கத்திக்குத்து என்பவை ஏனைய தாக்குதல்களாகும். இதுபற்றியும் அரச பொலிஸ் சேவைக்குத் தெரிவிக்கப்பட்டபோதிலும் எவ்வித பயனும் கிடைத்திருக்கவில்லை. இதனையடுத்து உபாலி தென்னக்கோன் இலங்கையிலிருந்தும் வெளியேறியிருந்தார். அத்துடன் அந்த மூன்று ஜனவரி மாதத் தாக்குதல்களும் தண்டிக்கப்படாது புறந்தள்ளப்பட்டன.

இலங்கையில் ஊடகத்துறையினருக்கும் அரசதரப்புக்குமிடையே இடம்பெற்று வரும் நீண்ட வரலாற்றைக்கொண்ட முறுகல் நிலையில் இம்மூன்று சம்பவங்களும் ஒரு திருப்புமுனையாக இருந்தன. இலங்கை அரசாங்கம் 25 வருடகால ஆயுதப்போராட்டத்தை நடத்திய

எல். ரி. ரி. ஈ அமைப்பினரை வெற்றிகொண்ட திருப்தியில் இருந்து வருகின்றது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இலங்கையின் முன்னணிப் பத்திரிகையாளர்கள் பலரும் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கக் காணப்படுகின்றனர். இலங்கையின் தற்போதைய நிலபரத்தின் தன்மைகளை அறிந்தவர்களாக தமது குடும்பத்தவருடன் அவர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் கோர ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு வெளியேறியவர்களில் சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளன ஏற்பாட்டாளரும், சுதந்திர

ஊடக அமைப்பாளருமான சுனந்த தேசப்பிரிய, இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சனத் பாலசூரிய, ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் இருவரும் இலங்கையில் பிரபலமானவர்கள். மே 27 ஆம் திகதி சுனந்த தேசப்பிரிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் முன்பாக தோன்றியிருந்தார். இலங்கையில் ஊடக சுதந்திர நிலபரம் குறித்து அவர் அறிக்கை சமர்ப்பித்திருந்தார். இதனையடுத்து அரச ஊடகத்துறையும், பல்வேறு அரச பேச்சாளர்களும் அவர் மீது வசைமாரி பொழிந்தனர்.

தேசப்பிரிய வெளியிட்ட அறிக்கை யூ - டியுப் மூலமாக துரோகி சுனந்த தேசப்பிரிய, ஐ. நா விலும் மனித உரிமை கவுன்ஸிலிலும் பொய் உரைக்கிறார். எல். ரி. ரி. ஈ அமைப்புக்கு வக்காலத்து வாங்குகிறார் என யூ - டியுப் கணணியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மே 28 ஆம் திகதி பொலிஸ்மா அதிபர் அரசாங்கத்தின் சுயாதீன தொலைக்காட்சிச் சேவையில் தோன்றினார். டெய்லிமிரர் ஆங்கில நாளிதழ் இது பற்றி குறிப்பிடுகையில் பல்வேறு பத்திரிகையாளர்கள் பெரும்பாலும் சிங்களவர்கள் எல். ரி. ரி.ஈ.அமைப்பினரிடம் பணம் பெற்றதாகவும் அவ்வமைப்பின் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு துணைபோவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டனர். அத்துடன் பொலிஸாருக்கு மேலதிக தகவல்கள் இதுபற்றித் தெரிந்துள்ளபோதிலும் விசாரணைகளின் பொருட்டு சில தகவல்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. “அவர்கள் தமது மேன்மையான தொழிலை துஷ்பிரயோகம் செய்துவிட்டனர்” என்று பொலிஸ்மா அதிபர் ஐயந்த விக்கிரமரட்ண குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை அரசுக்கு அவர்கள் துரோகமிழைக்கவில்லை. பெருமளவு பணத்தைப்பெற்றதோடு, இலவச வெளிநாட்டுப் பயணங்களையும் சொகுசு வாழ்க்கையையும் அவர்கள் அனுபவித்தனர் என்று பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டிருந்தார். சுனந்த தேசப்பிரிய அரச ஊடகத்துறையினாலும், உயர்மட்ட அதிகாரிகளாலும் குற்றஞ்சாட்டப்பட்டது இது முதல்தடவையல்ல.



காயமுற்ற போத்தல ஜயந்த அவரது மனைவி மகளுடன் காணப்படும் காட்சி அவர்கள் தற்போது இடம் குறிப்பிடப்படாத நாடொன்றில் புகலிடம் தேடியுள்ளார்கள்.

### போத்தல ஜயந்த மீதான தாக்குதல்

போத்தல ஜயந்த இலங்கையில் ஒரு பிரபல பத்திரிகையாளராவார். கடந்த பெப்ரவரியில் நாட்டைவிட்டு வெளியேறியவர்களில் இவரும் ஒருவர். மூன்று மாதங்கள் இந்தியாவில் தங்கியிருந்த பின்னர் அவர் நாடு திரும்பியிருந்தார். இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள்

சங்க பொதுச்செயலாளர் என்ற ரீதியில் அவரிடம் அந்த அமைப்பு சார்ந்த பல்வேறு பொறுப்புகள் இருந்து வந்தன இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் கொழும்பில் உள்ள முக்கியமான வதிவிடப் பகுதியில் தனக்கென அலுவலகமொன்றை கட்டத்தொடங்கியிருந்தது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், நிறுவ ஆரம்பித்த கட்டிடத்தொகுதியைப் பூர்த்தி செய்ய குறித்த கால அவகாசம் வழங்கப்பட்டது. இக்கால அவகாசத்துக்குள் பூர்த்தி செய்யாவிட்டால் நவம்பர் மாதம் அக்கால எல்லை முடிவடைவதுடன் கட்டிட நிர்மாணத்துக்காக வழங்கப்பட்ட காணி உறுதியும் வலிதற்றதாகிவிடுமெனத் தெரிவிக்கப்பட்டது.

ஜுன் மாதம் முதலாம் திகதியன்று போத்தல ஐயந்த பஸ்வண்டியொன்றில் அம்புஸ்தெனிய என்ற இடத்திலுள்ள சந்தியில் ஏறியிருந்தார். இச்சந்தி கொழும்பை அண்டிய நுகேகொடப்பகுதியில் அமைந்துள்ளது. திடீரென அவர் வெள்ளை வான் வண்டியொன்றில் பலாத்காரமான முறையில் ஏற்றப்பட்டார். வானின் கீழ்த்தளத்தில் அவர்

மடக்கி வைக்கப்பட்டதோடு அவரின் கரங்களும் பின்புறமாககட்டப்பட்டன. தன்னைக் கைது செய்தவர்கள், தனது “கால்களை உடைக்குமாறு

பேசியதை அவர் செவிமடுத்தார். மயக்கமுறும்வரை தாக்கப்பட்ட பின்னர் அவர் வெளியில் வீசப்பட்டார். மயக்கம் தெளிந்த பின்னர் தம்மீதான கட்டுக்களை அவிழ்த்துக்கொண்டதுடன் உதவிக்காக அவர் குரல் கொடுத்திருந்தார். மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். ஆனால் உதவி செய்ய மறுத்தனர். கடந்து சென்ற முச்சக்கரவண்டியொன்றிலிருந்த சிலர் அவரை அடையாளம் கண்டனர். அருகே இருந்த கொழும்பு வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். அங்கே உடனடி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். வைத்தியசாலை இயக்குனர் உடனடியாகப் பிரசன்னமாகி அவருக்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்தார்.

ஐயந்தவின் ஒரு கால் கடும் காயங்களுக்குள்ளானதுடன் அவர் நிரந்தரமாகவே ஊனமடையும் நிலையும் காணப்படுகிறது.

சர்வதேச ஊடக பிரதிநிதிகள் குழு அவரைச் சந்தித்தபோது அவர் உயர்ந்த மனநிலையில் இருந்ததையே அவதானிக்க முடிந்தது.

சர்வதேச ஊடக பிரதிநிதிகள் குழுவுக்கு கருத்துத் தெரிவித்த ஏனைய ஊடகவியலாளர்கள் போத்தல ஜயந்த தமக்கு கஷ்டமா நிலபரங்களில் குரல்கொடுத்து உதவியதைச் சுட்டிக்காட்டினர். அத்துடன் ஜயந்தவுக்கு ஏற்பட்ட நிலைமை தொடர்பாகவும் அவருக்கு ஆதரவாக குரல்கொடுக்க முடியாததையிட்டும் ஏனைய பத்திரிகையாளர்கள் மனம் வருந்தியிருந்தனர்.

தம்மை வானில் கடத்தித் தாக்குதல் நடத்தியவர்கள் சாதாரணமானவர்களல்ல. நன்கு பயிற்சி பெற்ற தாம் செய்வதை நன்கறிந்தவர்களாகவே இருந்தனர் என்று ஐயந்த தெரிவித்திருந்தார்.

செப்டெம்பர் இறுதிப்பகுதியில் போத்தல ஜயந்த இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக போட்டியின்றித் தெரிவானார். அக்டோபர் 2 ஆம் திகதி இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் நிரந்தரக் கட்டிடத்தில் மேற்படி சங்கத்தின் அங்குரார்ப்பண வைபவத்திலும் பங்குபற்றியிருந்தார். மறுதினம் அவரது கையடக்கத் தொலைபேசியில் இனந்தெரியாத இலக்கமொன்றிலிருந்து அழைப்பொன்று கிடைத்தது. அந்த அழைப்பில் மீளவும் அவரது நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டாரா? கடந்த காலங்களில் நடந்தவை பற்றி ஞாபகமுண்டா என்ற கேள்விகள் கேட்கப்பட்டன.

“இரிதா லங்கா” பத்திரிகை ஜெனரல் பொன்சேகாவுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான பிளவு பற்றிப் பிரஸ்தாபித்ததையடுத்து அதன் ஆசிரியர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். இதுபற்றி உத்தியோக பூர்வமற்ற வகையில் போத்தல ஜயந்த தமது கரிசனையையும் வெளியிட்டிருந்தார். அவரது இக்கருத்து பத்திரிகைகள் சிலவற்றில் வெளியானதையடுத்து மீளவும் அவருக்கு தொலைபேசி மிரட்டல் ஒன்று விடுக்கப்பட்டது.

இதேவேளை லங்கா வெப் என்ற இணையத்தளம் மேர்வின் சில்வா என்ற அமைச்சர் லசந்த விக்கிரமதுங்கவின் மரணத்துக்கும், ஐயந்த மீதான தாக்குதலுக்கும் உரிமை கோரியதைப் பிரசுரித்திருந்தது. இந்த அமைச்சர் ஊடகத்துறையினருடன் மோதுவதில் பிரபலமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேர்வின் சில்வாவின் இந்த கருத்து அவரது பிரதேசத்தைச் சேர்ந்த உளளுராட்சிக் கவுன்ஸில் நிர்வாகத்தை மிரட்டுவதாக இருந்தது. அவர் அக்கவுன்ஸ ிலுடன் அடிக்கடி முரண்பட்டிருந்தார். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் மேற்படி இணையத்தளத்தில் வெளியான தமது கருத்தை அவர் மறுத்திருந்ததுடன், அது ஆதாரமற்றதெனவும், தம்மால் எவ்வாறு அப்படி உரிமை கோரமுடியுமெனவும் கூறியிருந்தார். காரசாரமான கருத்துக்களை வெளியிடுவதோடு அவற்றைப் பின்னர் மறுதலிக்கும் விதத்தில் நடந்து கொள்வதில் மேர்வின் சில்வா பெயர் பெற்றவராக விளங்கினார்.

கூடவே ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் அவர்களாலேயே தமக்குத்தாம் மேற்கொள்ளப்பட்டதாகவும், வெளிநாடுகளில் புகலிடம் கோருவதே இதன் நோக்கமெனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தா.

தொலைக்காட்சிச் சேவையொன்றின் ஊழியர் ஒருவர் மீதான தாக்குதல், மற்றும் சட்டவிரோதமாகக்கூடுவது, தகாதவார்த்தைப் பிரயோகம் என்பவைபற்றி 2008 ஆம் ஆண்டு நவம்பரில் குற்றஞ்சாட்டப்பட்டபோதிலும் தொழில் அமைச்சராக அவர் தொடர்ந்து பதவியிலிருந்து வருகின்றார்.

# 5 அவதூறும், துன்புறுத்தலும்

### அரச ஊடகத்துறையின் துஷ்பிரயோகம்

வாய்மூலமான அவதூறை ஊடகத்துறை எப்போதும் சந்திக்க வேண்டியதாகவுள்ளது. தாக்குதலுக்குள்ளாகமுன்னர் போத்தல ஜயந்த அரச ஊடக நிர்வாகிகளால் இடைவிடாது இலக்க வைக்கப்பட்டார். இதன் அடிப்படையிலேயே அவர் தாக்கப்பட்டிருக்கலாமென ஊடகத்துறையினர்

கருதுகின்றனா.

மேலே குறிப்பிட்டது போல மே 28 ஆம் திகதி ஐயந்த மீதான தாக்குதலுக்கு மூன்று தினங்கள் முன்பதாக இலங்கையின் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண, இலங்கை நிலபரம் பற்றி செய்தி வெளியிடும் பல்வேறு ஊடகவியலாளர்கள் எல். ரி.ரி. ஈ யினரால் பலாத்காரமாக வாங்கப்பட்டவர்கள் எனக்கூறியிருந்தார்.

இதனை அவர் சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். மற்றுமொரு நிகழ்ச்சியில் ஐயந்தவின் படங்களுடன் அந்த பேட்டியை சுயாதீன தொலைக்காட்சி சேவை மறு ஒளிபரப்புச் செய்திருந்தது.



திஸ்ஸநாயகம், யசீகரன் (நடுவே) கொழும்பு நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்படுகின்றனர். இவர்களுக்குப் பின்னால் யசீகரனின் மனைவி வளர்மதி.

மே 22 ஆம் திகதி அரசசார்புப் பத்திரிகையான தினமின தாடி வளர்த்திருக்கும் பத்திரிகையாளர் மீது கல்லெறிந்து அவர்களை பதவி நீக்க வேண்டுமென தனது ஆசிரியத் தலைப்பில் குறிப்பிட்டிருந்தது இலங்கையில் தாடி வளர்ப்பது சர்வசாதாரணம். போத்தல ஜயந்தவும் அவ்வாறு தாடி வளர்த்திருந்தார். இதேபோல பத்திரிகையாளர்கள் அமைப்புக்களின் ஏனைய தாடிவளர்த்த, நீள்முடியுடைய உறுப்பினர்களையும் குறிப்பிட்டுத் தாக்குவதாக இந்த ஆசிரியத் தலைப்பு அமைந்திருந்தது.

அரச சார்பான சிங்களப் பத்திரிகையான தினமின நடுநிலையான கருத்துக்களை வெளியிடும் ஊடகவியலாளர்களை துஷ்பிரயோகம் செய்வதில் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

மார்ச் மாதம் 25 ஆம் திகதி, சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்தவரும், சர்வதேச சம்மேளன உறுப்பினருமான சுனில் ஜயசேகரவை தினமின பத்திரிகை சாடியிருந்தது. “தற்போதைய சூழ்நிலையே பத்திரிகையாளர்களைப் பெரிதும் ஒடுக்குவதாக இருப்பதாக ” அவர் கூறியதன் காரணமாகவே அவர் மீது அவதூறான கருத்துக்கள் தினமின பத்திரிகையினால் வெளியிடப்பட்டது.

மார்ச் 19 ஆம் திகதி ஜயசேகர ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு, அடிப்படை உரிமைகள் தொடர்பாக மகாநாடொன்றில் குறிப்பிட்டது சம்பந்தமாகவே தினமின இவ்வாறு தெரிவித்திருந்தது.

பெப்ரவரி 1 ஆம் திகதி பாதுகாப்புத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்களை எச்சரித்திருந்தார். பொறுப்பாக நடந்து கொள்ளாத பட்சத்தில் அத்தாபனங்கள் நாட்டிலிருந்து விரட்டப்படுமெனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். யுத்தப் பகுதிகளில் சிவிலியன்களது கஷ்டங்கள், சிரமங்கள் பற்றிக் குறிப்பிட்ட மூன்று வெளிநாட்டு செய்தி நிறுவனங்களை அவர் குற்றஞ்சாட்டிருந்தார். அதன்பின்னர் வெளிநாட்டுச் சேவையொன்றின் தலைவரது இலங்கை வதிவிட அனுமதியின் கால அவகாசம் குறைக்கப்பட்டிருந்தது. யுத்தப் பிரதேச அவலங்களை அவர் சுட்டிக்காட்டியதன் காரணமாகவே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## ஊடகத்துறை மீதான பாதுகாப்புச் செயலாளரின் கசப்புணர்வு

சுடர்ஒளி ஆசிரியர் என். வித்தியாதரன் தமது குடும்ப வைபவமொன்றில் பங்கபற்றியிருந்தவேளை

ஆட்கடத்தல் காணியில் கும்பலொன்றினால் வாகனமொன்றில் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டார். இச்சம்பவம் பெப்ரவரி 27 ஆம் திகதி இடம்பெற்றது. சம்பவம் இடம்பெற்று ஐந்து மணிநேரத்தின் பின்னரே அவர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அவுஸ்திரேலிய தொலைக்காட்சி செய்தியாளர்களை பாதுகாப்புச் செயலாளர் சந்தித்த பின்னரே இந்த அறிவிப்பு கிடைத்தது. இத்தொலைக்காட்சி நிகழ்ச்சி

சி. பி.சி. செய்திச் சேவையில் மார்ச் 11 ஆம் திகதி ஒளிபரப்பானது.

அப்போது வித்தியாதரன் பற்றிக் கேள்வி எழுப்பிய செய்தியாளருக்கு கோத்தபாய ராஜபக்ஷ காட்டமான குரலில் பதிலளித்ததோடு, வித்தியாதரன் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர் எனவும் கூறியிருந்தார். " வித்தியாதரன் ஒரு பயங்கரவாதி அவரைப் பற்றி நீங்கள் கேட்பதானால் உங்களது கரங்களும் இரத்தம் படிந்ததே " என ராஜபக்ஷ கூறியிருந்தார். கைதாகியிருப்பவருக்கும், பெப்ரவரி 20 ஆம் திகதி கொழும்பில் நடந்த விமானத்தாக்குதலுக்கும் தொடர்பிருப்பதனை பாதுகாப்புச் செயலாளர் அறிந்து வைத்திருப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

இரு மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின்னர் நிபந்தனையற்ற முறையில் வித்தியாதரன் விடுதலை செய்யப்பட்டார். அவர் மீது விசாரணை செய்த பொலிஸார் வழக்குத் தொடுக்குமளவுக்கு அவருக்கு பயங்கரவாதிகளுடன் எவ்வித தொடர்புமில்லை எனத் தெரிவித்திருந்தனர்.

சர்வதேச ஊடக பிரதிநிதிகள் தேசியபாதுகாப்புக்கான ஊடக நிலைய நிர்வாக இயக்குனர்

லக்ஷ்மன் ஹுனுகல்லயைச் சந்தித்தனர். இந்த நிலையம் பொலிஸ், பாதுகாப்புப் படைகள், புலனாய்வுத்துறையினர் பற்றிய ஊடக நடவடிக்கைகளை கையாளுகிறது. அப்போது லக்ஷ்மன் ஹுனுகல்ல வித்தியாதரன் மற்றும் ஏனைய பத்திரிகையாளர்கள் பற்றித் தெரிவிக்கையில், இவர்கள் போன்றவர்கள் திருகுதாளங்களைச் செய்தபின்னர் சாதுரியமாகத் தப்பியும் விடுகின்றனர் எனவும் குறிப்பிட்டிருந்தார். ஆயினும் இலங்கை அரசு தவறான ஊடகப் பிரசாரங்களுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

### சீரான சட்டப்பாதுகாப்புக்கு மறுதலிப்பு

ஜுலை நடுப்பகுதியில் சண்டே லீடர் பத்திரிகை சம்பந்தப்பட்ட வழக்கொன்றில் ஆஜரான ஐந்து சட்டத்தரணிகளை துரோகிகள் என்று பாதுகாப்புத்துறை இணையத்தளமொன்று குறிப்பிட்டிருந்தது. "கறுப்பு அங்கித்துரோகிகளின் சங்கமம் " என்று அந்த இணையத்தளம் தெரிவித்திருந்தது. கல்கிஸை நீதிமன்றில் சண்டே லீடர் பத்திரிகை சார்பாக ஆஜரான இச்சட்டத்தரணிகள் எல். ரி. ரி. ஈ சார்பாக ஆஜராவதில் நீண்ட வரலாற்றைக் கொண்டவர்கள் எனவும் அந்த இணையத்தளம் கூறியிருந்தது.

த சண்டே லீடர் பத்திரிகை ஜனவரி மாதம் வரை லசந்த விக்கிரமதுங்கவை ஆசிரியராகக் கொண்டு இயங்கிவந்தது. எனவே பாதுகாப்புத் துறைச் செயலாளரால் 2006 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மானநஷ்ட வழக்குத் தொடர்பாக அப்பத்திரிகை வழக்குகளை சந்தித்து வந்தது.

உக்ரேயினிலிருந்து மிக் 27 ரக போர் விமானங்களை கொள்வனவு செய்தமை தொடர்பாக முறைகேடுகள் இடம்பெற்றதாகவே சண்டே லீடர், சண்டே டைம்ஸ் பத்திரிகை ஆகியவை கட்டுரைகள் எழுதியிருந்தன. இவை சம்பந்தமாகவே பாதுகாப்புச் செயலாளர் சண்டே லீடர் மீது வழக்குத் தாக்கல் செய்திருந்தார். ஆயினும் அதே தகவலைப் பிரசுரித்த சண்டே ரைம்ஸ் பத்திரிகையை அவர் வழக்கிலிருந்தும் தவிர்த்திருந்தார். தேசிய அடையாள அட்டை விநியோகம் தொடாபாக டென்டர் கோரிக்கை விடுப்பதில் கோத்தபாய ராஜபக்ஷ முறைகேடுகளை மேற்கொண்டுள்ளார் எனவும் சண்டே லீடர் பத்திரிகை சுட்டிக்காட்டியிருந்தது. அவரது படத்துடன் இக்கட்டுரை பிரசுரமாகியிருந்தது. அவர் இதில் நேரடியாக சம்பந்தப்படாத போதிலும் அவரது அமைச்சு இதில் சம்பந்தப்பட்டதால், சண்டே லீடர் பத்திரிகைமீது அவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்குகளின் இறுதிக்கட்டங்களில் லசந்த விக்கிரமதுங்க மன்னிப்புக் கோரி தமது தரப்பு வாதத்தை வாபஸ் பெறுவதற்குரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால் விக்கிரமதுங்க இதற்கு இணங்கவில்லை. தம்மிடம் மேற்படி மோசடியை நிரூபிப்பதற்கான ஆதாரம் இருப்பதாக லசந்த விக்கிரமதுங்க நீதிமன்றிடம் கூறியிருந்தார்.

விக்கிரமதுங்க கொலையுண்ட பின் நீதிமன்ற வழக்குகளை எதிர்நோக்கும் அறிக்கைகளை பிரசுரிப்பதில்லையென்று சண்டே லீடர் பத்திரிகை ஏற்றுக்கொண்டது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பின்னர் நீதிமன்றத்தை நாடி தம்மீதான அவதூறான தகவல்களை வெளியிடுவதிலிருந்து சண்டே லீடர் பத்திரிகை விலகியிருக்கவேண்டுமென இடைக்காலத் தடை மனுவை நீதிமன்றில் தாக்கல் செய்தார். இதற்கு அனுமதி வழங்கப்பட்டு சண்டே லீடர் பத்திரிகையின் பதிலும் எதிர்பார்க்கப்பட்டது. சண்டே லீடர் பத்திரிகை அவர் கூறியதற்கு இணங்கியதையடுத்து அத்தடை நீக்கப்பட்டது. ஆனால் யுத்தம் முடிந்தபின்னர் த சண்டே லீடர் பத்திரிகை பாதுகாப்புச் செயலாளர் பற்றி சில குறிப்புகளை வெளியிட்டது. அதில் அவரையும் தமிழ்க் கிளர்ச்சிவாத தலைவரையும் இராணுவ ரீதியாக ஒப்பிட்டிருந்தது. இந்த விடயம் ஒரு மானநஷ்ட சம்பந்தப்பட்டதாக இருந்தது. ஆனால் இத்தடவை சண்டே லீடர் பத்திரிகை சார்பில்



சுடரொளி நிர்வாகம் , ஆசிரியர் பீடமும் கொழும்பு அலுவலகத்தில், இடப்புறம் என். வித்தியாதரன், ஈ. சரவணபவன் இடமிருந்து மூன்றாம் இடம், அத்துடன் கே. கே. ரட்ணசிங்கம், என் பத்மசீலன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

சட்டத்தரணிகள் ஆஜராகாது விலிகியிருந்தனர். பாதுகாப்பச் செயலாளரை தேசிய தலைவராகவும் அவருக்கெதிராக செல்லமுடியாதென்றும் அவர்கள் தெரிவித்தனர். ஆனால் லீடர் பத்திரிகை ஏற்பாடு செய்த கனிஷ்ட சட்டத்தரணிகளே இவ்வாறு மறுத்தனர். இந்த வழக்கின் முதல் நாளன்று நீதிமன்ற வளவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அதோடு வழக்குக்காக ஆஜரானபோது அவர்கள் உரியவகையில் தயார் செய்யப்படாமை இந்த மறுப்புக்கு காரணம் என தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து கனிஷ்ட சட்டத்தரணிகளுக்குப் பதிலாக சிரேஷ்ட சட்டத்தரணிகள் ஐந்துபேர் ஆஜரானார்கள் அவர்கள் அந்த வழக்கை கொண்டு நடத்தினர்

சண்டே லீடர் நிர்வாகம் பாதுகாப்புச் செயலாளரின் நடவடிக்கை தமது சுதந்திரத்தை ஒடுக்கும் செயலாக இருப்பதாக கருதினர். தமக்கு நியாயமான பொது நலம் கருதிய அறிக்கைகளை வெளியிட உரிமை இருப்பதை சுட்டிக்காட்டினர்.

அதேசமயம் லங்கா நியூஸின் ஆசிரியரும் பதிப்பாளருமான செந்துருவன் செனாதீர போத்தல ஐயந்த மீதான தாக்குதல் பற்றி விபரத்தை வைத்தள்ளாரா என்றறிய நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டார். ஐயந்த கடத்தப்பட்டது பற்றி நேரடி சாட்சி ஒருவரிடம் லங்கா நியூஸ் தகவலைப் பெற்றதோடு அது பற்றி குறிப்பிட்டுமிருந்தது. அத்துடன் ஐயந்தவின் மனைவியிடம் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யமாறு செந்துருவன் சேனாதீர கேட்டிருந்தார். இதனையடுத்து பொலிஸார் அவரிடம் இருக்கும் தகவல்களை வெளியிடுமாறு கேட்டனர். அவர் அதற்கு மறுக்கவே சட்டத்துக்கு மாறான செயலெனெ அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அவ்வழக்கு வாபஸானது. பொலிஸாராலும் பாதுகாப்புப் படையாலும் லங்கா நியூஸ் பயமுறுத்தப்பட்டது. இதன் முதற்தடவையல்ல. பெ்ரவரி 2009 ஆம் ஆண்டு சி. ஐ. டி. பொலிஸார் இரு தடவைகள் அவரை விசாரித்தனர். அத்தோடு எட்டு தடவைகள் அவரை பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த ஆண்டில் விசாரித்தனர்.

## 6 ஜே. எஸ். திஸ்ஸநாயகம் குற்றஞ்சாட்டப்பட்டார்

ஆகஸ்ட் 31 ஆம் திகதி ஜே. எஸ். திஸ்ஸ நாயகத்தை கொழும்பு மேல்நீதிமன்ற குற்றவாளியாகக் கண்டது. இவர் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் பிரபல கட்டுரையாளர். இவருக்கு பயங்கரவாத தொடர்பு இருப்பதாக குற்றஞ்சாட்டி 20 வருட கடுழியச்சிறை விதிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 25 ஆம் திகதி 2008 ஆம் ஆண்டு திஸ்ஸநாயகம் அவரது பதிப்பாளர் வி. யசீகரன் அவரது மனைவி வளர்மதி மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இலங்கையின் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கலானது இதற்கு மன்னர் ஐந்து மாத காலம் திஸ்ஸ தடுப்பக்காவலில் வைக்கப்பட்டார். அவசரகால விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட கால எல்லையை கடந்ததாக இம்மூவரது தடுப்புக் காவல் கடந்த மார்ச் மாதம் முதல் அமுலில் இருந்தது.

பயங்கரவாதம் தடைச்சட்டம் பற்றிய நியாயதிக்கம் கொண்ட கொழும்பு நீதிமன்றில் விசாரணை நடந்தது. நோர்த் ஈஸ்டன் மாதப் பத்திரிகையில் வெளியான கட்டுரைகள் தொடர்பாக விசாரணை முடுக்கிவிடப்பட்டது. திஸ்ஸநாயகம் மீது கட்டுரை எழுதியமை யசீகரன் அதனை பதிப்பித்தமை வளர்மதி அதற்கு உதவியமை என குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. திஸ்ஸ

நாயகம் மீதான வழக்கு வேறாக விசாரிக்கப்பட்டது. இதற்குரிய காரணம் தெரிவிக்கப்படவில்லை. நோத் ஈஸ்ட்டன் மாதப் பத்திரிகையின் அவரது முதலாவது கட்டுரை வெளியானது. தனத பிரஜைகளை காப்பாற்ற முடியாத இலங்கை அரசுக்கு சர்வதேச அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டிருந்தது. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் பாதுகாக்கப்படவில்லை எனவும் அவர்களது மரணங்களுக்கு ஆயுதப்படையினரே காரணமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. அவரது இரண்டாவது கட்டுரை 2006 ஆம் ஆண்டு நவம்பரில் வெளியாகியிருந்தது. இக்கட்டுரை மனிதாபிமானப் பிரச்சினைகளை சுட்டிக்காட்டியது. வாகரைப் பிரதேசத்தில் இராணுவ ஆட்டிலறி கனரக ஆயுதங்களின் தாக்குதலுக்கு பொதுமக்கள் இலக்கானது பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. எல். ரி. ரி. ஈ. பிடியிலிருந்து வாகரையை மீட்க நடத்தப்பட்ட தாக்குதல் நன்கு திட்டமிட்ட முறையில் தமிழரை பொறியாக வைத்து நடத்தப்பட்டதாக திஸ்ஸநாயகம் எழுதியிருந்தார். கிளர்ச்சியாளர்கள் கொழும்பு வருவதைத் தடுக்க இதை கவசமாக அரசு பயன்படுத்த முயற்சித்தது. ஆனால் இதன் விளைவு மனித அவலங்களை உள்ளடக்கியதை அக்கட்டுரை சுட்டிக்காட்டியது.

தம்மீதான விசாரணையில் தாம் எழுதியவை அனைத்துக்கும் திஸ்ஸ பொறுப்பேற்றார். இனங்களிடையே குழப்பத்தை தூண்டியதாக திஸ்ஸ மீது முக்கிய குற்றச்சாட்டு இக்குற்றச்சாட்டு பயங்கரவாத தடைச்சட்ட 2 (ஐ) (ர்) பிரிவு சார்ந்தது இப்பிரிவில் வாய்மூலமாக எழுத்த மூலமாக அல்லது வேறுவிதத்தில் இன குரோதத்தை தூண்ட முயல்வது சட்டத்தக்கு விரோதமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. திஸ்ஸவின் சட்டத்தரணிகள் இராணுவத்தினரது நடவடிக்கைகள் பற்றி கூறுவது இனக்குரோதமல்ல என்று வாதிட்டனர்.

ஆனால் மறுதரப்பினர் தெரிவித்த குற்றச்சாட்டு (அ) திஸ்ஸநாயகம் இராணுவத்தை விமர்சித்துள்ளார். (ஆ) அவர் ஒரு தமிழர் (இ) இராணுவம் சிங்கள மயமானது. (ஈ) திஸ்ஸநாயகத்தின் கட்டுரை தமிழ் சிங்கள பிளவை துாண்டவல்லது.

2006 ஆம் ஆண்டு எழுதப்பட்டவை தவிர ஒப்புதல் வாக்குமூலத்தை திஸ்ஸநாயகம் வழக்குத் தொடுநர்கள் தெரிவித்தனர். ஆனால் திஸ்ஸ இதனை மறுத்தார். தவறான ஆதாரங்“களா“ மூலம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாகக் கூறினார். அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் திஸ்ஸ வின் சகா யசீகரன் சித்திரவதை செய்யப்படுவதை கண்டதால் அவர் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு இணங்கியதாக தெரிவித்தனர். ஐந்து மாதம் எவ்வித விசாரணையுமின்றி தடுத்த வைக்கப்பட்ட காலத்தில் திஸ்ஸ மீதான வாக்குமூலம் பெறப்பட்டதாக அவர் சார்பில் தொவிக்கப்பட்டது.

ஒப்புதல் வாக்குமூலத்தில் கறுப்பு மையால் 57 தடவைகள் திருத்தம் செய்யப்பட்டது சுட்டிக்காட்டப்பட்டது. “ நான் எல். ரி. ரி. ஈ. யிடம் பணம் வேண்டாம் என்று கூறினேன் என்று எழுதப்பட்டவை நீலமையினால் நான் பணம் வேண்டுமென்று கூறினேன் என மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இது குறித்து குளறுபடியை திஸ்ஸவின் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர். ஆயினும் வழக்காளிகள் திஸ்ஸ வின் பெயரில் வங்கியிலிருந்த இலங்கை ரூபா 1 லட்சம் பணம் பற்றி குறிப்பிட்டனர். இப்பணம் பயங்கரவாதப்பணம் என வாதிடப்பட்டது. அதோடு திஸ்ஸநாயகம் அடிக்கடி கிளிநொச்சியில் எல். ரி. ரி.ஈ அமைப்போடு தொடர்பு வைத்திருந்தமையும் சுட்டிக்காட்டப்பட்டது.

வழக்கில் குறிப்பிடப்பட்ட கணக்கு விபரம் திஸ்ஸ நாயகத்தினாலும் யசீகரனாலும் பெறப்பட்டமை பற்றியும் குறிப்பிடப்பட்டதோடு நோர்த் - ஈஸ்டர்ன் மாதப்பத்திரிகை இனங்களிடையே குரோதத்தை உண்டு பண்ணும் விதத்தில் வெளிவந்தாதகவும் வழக்குத் தொடுநர்கள் வழிவிட்டனர்.

ஆனால இந்த கொடுப்பனவு எவ்விதத்திலும் ஒரு குற்றமல்ல எனவும், பயங்கரவாதத்துக்காகப் பயன்படுத்தினால் மட்டுமே குற்றமெனவும் திஸ்ஸ சார்பில் வாதிடப்பட்டது. அத்துடன் மேற்குறிப்பிட்ட பணம் அவுட்ரீச் எஸ். எல். கொம் என்ற திஸ்ஸவினால் நடத்தப்பட்ட இணையத்தளத்திற்காக இயந்திரங்கள் வாங்கப்பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

தீர்ப்புப் பற்றித் தீர்மானிக்கையில் நீதிபதி திஸ்ஸவின் ஒப்புதல் வாக்குமூலம் பலவந்தமாக எடுக்கப்பட்டதை நிராகரித்ததுடன், இரு பொலிஸ ார் முன்பாக வழங்கப்பட்ட வாக்குமூலமாகவே அது கருதப்பட்டது.

பொலிஸார் குறிப்பிடுகையில் கல்வியறிவுள்ள அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர் ஒருவர் சொன்னதை செய்யவேண்டுமென அழுத்தம் கொடுப்பதை ஏற்கமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அக்கட்டுரைகள் இனக்குரோதத்தை உண்டுபண்ணக்கூடியவையல்ல என்று சட்டத்தரணிகள் தெரிவித்த விவகாரம் நிராகரிக்கப்பட்டது.

கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படையில் அரசியலமைப்புக்கமைவாக அந்த கட்டுரைகள் இருந்தன என்ற விவாதமும் நிராகரிக்கப்பட்டது. அரசியல் அடிப்படையில் பொது அபிப்பிராயங்களை மறுதலிப்பதாக அவை இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

நீதிபதி தீபாலி விஜயசுந்தர திஸ்ஸ சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வெளியிட்ட குறிப்புகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனையடுத்து அப்பீல் செய்வது பற்றி நோக்குகையில் அதற்கு மேலும் பலமாத கால அவகாசம் தேவைப்படுவதும் உணரப்பட்டது. அதேசமயம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிணை பெறவும் நியாதிக்கம் காணப்படுகிறது. டிசம்பர் மாத முற்பகுதியில் திஸ்ஸ சார்பில் மூன்று விண்ணப்பங்கள் நீதிமன்றில் தாக்கலாயின. ஆனால் அவை கவனத்திலெடுக்கப்படாது ஒத்திவைக்கப்பட்டன.



யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் காரியாலயம்.

# 7 அடிப்படை மனித உரிமைகள் சுதந்திரத்துக்காக சர்ச்சைக்குள்ளாவது

**யசீகரன் - வளர்மதி**

அக்டோபர் 13 ஆம் திகதி சமாந்தரமான முறையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்படலாம் என்ற சமிக்ஞை வழங்கப்பட்டது. அவர்கள் உயர்நீதிமன்றில் தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாக தெரிவித்து தாக்கலான வழக்கை வாபஸ் பெற்றால் அவர்கள் மீதான வழக்கு விசாரணை தொடரமாட்டாதென அரசசட்டத்தரணி நீதிமன்றில் தொவித்தார்.

இந்த நிபந்தனையை வெளியிட்ட அரச சட்டத்தரணி இந்த இருவர் மீதும், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்படுத்தக்கூடிய ஆதாரங்கள் எதுவும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திகதியில் யசீகரன் -வளர்மதி சார்பான சட்டத்தரணிகள் அவர்கள் இருவரும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை வாபஸ் பெற விரும்புவதாக நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதனையடுத்து இணக்கப்பாடொன்றின் அடிப்படையில் அவ்விருவர் மீதான குற்றச்சாட்டுக்களும் வாபஸ் பெறமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

யசீகரன்- வளர்மதி ஆகியோர் கைது, சித்திரவதை ஆகியவற்றினால் அவஸ்தைப்பட்டு நீதிமன்ற விசாரணைக்குள்ளான நிலையில் இந்த அறிவிப்பினால் ஆச்சரியமடைந்தனர். அக்டோபர் 13 ஆம் திகதிக்கு இரு வாரங்களின் பின்னர் நிபந்தனையற்ற முறையில் அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர். ஆயினும் தமக்கு எதிர்காலத்தில் நேரக்கூடிய உத்தேச அச்சுறுத்தல்கள் காரணமாக தாம் குறித்த தகவல்களை அவர்கள் இப்பேட்டியில் மிகச் சுருக்கமாகவே தந்தனர்.

இந்நிலையில் வழக்குத் தொடுநர்கள் அவர்கள் மீதான விசாரணைகளை வாபஸ்பெற முன்வந்தமை தொடாச்சியான நிகழ்வுகளை மையமாகக் கொண்டிருந்ததையும் அறிய முடிந்தது.

கைது செய்யப்பட்டதையடுத்து யசீகரன் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தொடர்ச்சியான சித திரவதைக்குள்ளாக்கப்பட்டிருந்தார். ஆயினும் அவரது ஒப்பதல் வாக்குமூலம் மே 6 ஆம் திகதி

பதிவு செய்யப்பட்டது. யசீகரனின் சட்டத்தரணி சித்திரவதை சம்பந்தமாக சட்டவைத்திய அதிகாரியால் யசீகரன் பரிசோதிக்கப்படவேண்டுமென நீதிமன்றில் குறிப்பிட்டார்.

இலங்கை நீதிச்சட்டத்தின் கீழ் அரச சட்ட மருத்துவரின் இறதி அறிக்கை சட்டவலுவுடையதாகும். இந்நிலையில் எட்டு தடவைகள் மேற்படி பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன. மார்ச் 28

ஆம் திகதிக்கும், ஆகஸ்ட் 20 ஆம் திகதி 2008 ஆம் ஆண்டுக்குமிடையில் இது நடத்தப்பட்டது. ஒவ்வொரு தடவையும் யசீகரன் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவருடன் கூட்டிச் செல்லப்பட்டார். அவர் அடிக்கடி யசீகரனிடம் சித்திரவதை செய்யப்பட்டது பற்றிக் கூறவேண்டாமெனத் தெரிவித்தார். இதற்கு மேலதிகமாக யசீகரனைப் பரிசோதித்த வைத்திய அதிகாரி சிங்களமொழி பேசுபவர். யசீகரனுக்கு சிங்களமோ அல்லது ஆங்கிலமோ பேசவராது. மே 27 ஆம் திகதி அளவிலேயே தமிழில் பேச்க்கூடிய சட்டவைத்திய அதிகாரி ஒருவர் அவரைப் பார்வையிடும் பணிக்கு அமர்த்தப்பட்டார். அவ்வைத்திய அதிகாரி யசீகரனின் உடலில் காயங்கள் இல்லையென உறுதிப்படுத்தினார்.

இதனையடுத்து வழக்கத் தொடுநர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றம் மற்றமொரு

மருத்துவ அறிக்கைகக்கு உத்தரவிட்டது. அச்சமயம் யசீகரன் உண்மையில் சித்திரவதைக் குள்ளானார் என்று உறுதி செய்யப்பட்டது. இதனடிப்படையிலேயே யசீகரன் - வளர்மதி ஆகியோரை காவலில் வைத்திருந்தது தொடர்பாக உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை தாக்கலாக முடிவு செய்யப்பட்டது.

இக்கட்டத்திலேயே வழக்குத் தொடுநர்கள் வழக்கைத் தொடர்ந்து நடத்துவதில்லை எனத் தீர்மானித்தனர்.

யசீகரன் மீதான வழக்கிற்கான சாட்சியங்கள் குறைவான நிலையில், அவர் மீதான சித்திரவதை குறித்த தகவல்கள் பலமானதாக இருந்தன. இதன் காரணமாகவே வழக்கை விசாரித்த நீதிபதி இந்த வேறுபாட்டை உணர்ந்திருந்தார். இதனால் வழக்குத் தொடுநர்கள் தமது மரியாதையைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

திஸ்ஸநாயகமே குற்றத்துக்குரிய கட்டுரைகளை எழுதிய நிலையில் யசீகரன் - வளர்மதி மீது வழக்குத் தொடர ஆதாரங்கள் இல்லையென வாதிடப்பட்டது. மற்றும் யசீகரனும் அவர் மனைவி வளர்மதியும் வெறுமனே பதிப்பாளர்களாக இருந்ததாக மட்டும் சுட்டிக்காட்டப்பட்டது.

**வித்தியாதரன் சமாச்சாரம**

குடும்ப உறவினர் ஒருவரது இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட வேளை பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி சுடர்ஒளி ஆசிரியர் எஸ். வித்தியாதரன் மடக்கிப்பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டு வான் ஒன்றில் ஏற்றப்பட்டார். அன்றைய தினம் காலை 9. 30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. அத்துடன் கொழும்பிலுள்ள ஊடக சமூகத்தினரிடையே ஒரு பயப்பிராந்தியை இச்சம்பவம் உண்டுபண்ணியது.

இதுகுறித்து பத்திரிகையாளர்கள், ராஜதந்திரிகள் கண்டனங்களை வெளியிட்டனர். அழுத்தம் காரணமாக இவரைக் கைது செய்தவர்கள் சாக்கொன்றில் சுறறிக்ககட்டி கொழும்பு குற்றவியல் பிரிவு தலைமையகம் முன்பாக இவரை விட்டுச்சென்றனர். பின்னர் இவர் குற்றவியல் பிரிவினரால் வித்தியாதரன் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தனர். கைதான நேரம் பிற்பகல் 1. 30 மணியெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

வித்தியாதரனின் தொலைபேசி உரையாடலை மையமாக வைத்தே பொலிஸார் அவர் மீதான விசாரணையை ஆரம்பித்தனர்.

இந்த தொலைபேசி உரையாடல்கள் எல். ரி. ரி. ஈ. அமைப்பினர் பெப்ரவரி 20 ஆம் திகதி மேற்கொண்ட கொழும்பு வான்தாக்குதல்களின்போது பதிவு செய்யப்பட்டவையாகும்.

அத்தாக்குதல்கள் தோல்வியைத் தழுவிக்கொண்டிருந்த எல். ரி. ரி. ஈ அமைப்பின் இறுதிக்கட்டத் தாக்குதல்களாக அமைந்திருந்தன. இந்நிலையில் அத்தினத்தில் வித்தியாதரன் நடத்திய தொலைபேசி உரையாடல்கள் எவ்விதத்திலும் விஷமத்தனமானவையல்ல என்பது அவரால் நிரூபிக்கப்பட்டதாக இருந்தது. ஆயினும் அவரது வங்கிக்கணக்கு விபரங்களே ஆராயப்பட்டு

அதில் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள், பண மீள் எடுப்புக்கள் என்பவை பற்றிய ரசீதுகள் சந்தேகத்தக்குரியவையாக நோக்கப்பட்டன. இக்கட்டத்திலும்கூட வழங்கப்பட்ட விளக்கங்கள் தெளிவானவையாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும் இருந்தன.

இக்கட்டத்திலேயே பயங்கரவாத நடவடிக்கைப் புலனாய்வாளர்கள் வித்தியாதரன் தமது பாதுகாப்பில் வைக்கப்படவேண்டுமென குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் கேட்டிருந்தனர். இத்தகைய மாறுதல் வித்தியாதரனுக்கு உடல் ரீதியான பாதிப்புக்களையும் ஏற்படுத்தியிருக்க முடியும்.

ஆனால் குற்றப்புலனாய்வுப்பிரிவினர் தமக்குள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ஒரு பத்திரிகையாசிரியர் தம்மாலேயே விசாரிக்கப்படவேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தனர்.

இத்தருணத்தில் வித்தியாதரனின் குடும்பத்தினர் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர். அதில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

ஏப்ரல் இறுதிப்பகுதியில் வித்தியாதரனுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய ஆதாரமில்லை என்பதை பொலிஸார் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தில் அவரது குடும்பத்தினர் தாக்கல் செய்த மனு வாபஸ் பெறப்படும் பட்சத்தில் அவரது விடுதலை சாத்தியமாகுமென அ ர ச ச ட் ட த் த ர ணி தெரிவித்திருந்தார்.

சிறைவைக்கப்பட்டபத்திரிகை ஆசிரியரின் குடும்பமும் இதற்கு இணங்கியது. இத்தகைய விடயங்கள் பாதுகாப்பு பிரிவுகள் தமது சட்டத்துக்கு மாறான நடவடிக்கைகளிலிருந்து தப்புவதற்கு எவ்வாறு சமரசம் செய்கின்றன என்பதைப் புலப்படுத்தவதாக இருந்தது.




ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடக சுதந்திரம் பற்றி அறிவிக்க வேண்டியவராக இருக்கின்றார். எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏனைய வாக்குறுதிகளோடு ஊடக சுதந்திரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

**ஆர்த்தர் வாமனன் விவகாரம்**

இவ்விடம் பெரிதும் பாரதுாரமானதாக இல்லாவிட்டாலும், இதுபற்றி நிச்சயம் தற்போதைய சூழ்நிலையில் பேசுவது அவசியமானதாகும். ஆர்த்தர் வாமனன் த சண்டே லீடர் பத்திரிகையின் ஒரு நிருபராவார். அக்டோபர் 2007 ஆம் ஆண்டு இவர் சி. ஐ. டி. பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டார். இலங்கையின் தொழில் ஊக்குவிப்பு அமைச்சர் மனோ விஜேயரட்னவிடம் கப்பம் கோரினார் என்ற வகையிலேயே இந்த விடயம் அமைந்திரந்தது.

அக்டோபர் 21 ஆம் திகதி, 2007 ஆம் ஆண்டு த சண்டே லீடர் பத்திரிகை கட்டுரையொன்றைப் பிரசுரித்திருந்தது. இதனை ஆர்த்தர் வாமனன் எழுதியிருந்தார்.

அக்கட்டுரையில் மனோ விஜேரட்ன அமைச்சரின் பாரியார் வெளிநாட்டுப் பயணமொன்றின்போது கையடக்கத் தொலைபேசியொன்றைப் பாவித்தமைக்காக இலங்கை நாணயப்படி 67 ஆயிரம் ரூபாவை செலவிட்டார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது கணவரின் அமைச்சே இச்செலவைப் பொறுப்பேற்றது எனவும் இது அரசாங்கத்தினால் வழக்கப்படமுடியாத நடைமுறையெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அக்டோபர் மாதம் 19 ஆம் திகதி தமது செய்தி அறிக்கையை அச்சுக்கு அனுப்பிவைக்க முன்பதாக, ஆர்த்தர் வாமனன் தமது தாயின் பெயரில் பதிவு செய்யப்பட்ட கையடக்கத் தொலைபேசி மூலமாக அமைச்சர் மனோ விஜேயரட்னவிடம் இது விடயம் தொடர்பாக பேசமுற்பட்டுள்ளார்.

இச்சமாச்சாரம் பத்திரிகையில் வெளியிடப்பட்ட தினத்தில், வாமனனுக்கெதிராக அமைச்சர் மனோ

வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அதில் மேற்படி செய்தியைப் பிரசுரிக்காமல் விடுவதற்காக அமைச்சர் மனோ விஜேயரட்னவிடம் ஆர்த்தர் வாமனன் இலங்கை ரூபா 5 லட்சத்தைக் கப்பமாகக் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தமது தொலைபேசியில் பதிவான உரையாடலை முக்கிய ஆதாரமாக அமைச்சர் சமர்ப்பித்திருந்தார். அக்டோபர் 23 ஆம் திகதி அமைச்சா விஜேயரட்ன வாமனனை அவரது பெயரைக்கூறித் தாக்கிப் பேசினார். மறுநாள்

சி. ஐ. டி. யினர் வாமனனைக் கைது செய்ததோடு அவரது தாயாரையும் குறுகிய நேரக் காவலில் வைத்தனர். பலநாட்கள் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் வாமனனுக்குப் பிணை வழங்கப்பட்டது. ஆனால் அவருக்கெதிரான வழக்கு தொடர்ந்தது. சி. ஐ. டி. பொலிஸார் வாமனன் பாவித்த கையடக்கத் தொலைபேசியை தமது கணனி இயந்திரமூடாகப் பரிசீலித்தனர்.. ஜுன் 2009 ஆம் ஆண்டு அது தொடர்பான இறுதி அறிக்கை மஜிஸ்திரேட் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதேசமயம் வாமனன் உயர்நீதிமன்றில் தமது அடிப்படை உரிமை தொடர்பாக ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கைத் தொடர நீதிமன்றம்

அனுமதியளித்திருந்தது. ஆனால் அமைச்சருடைய சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு வெளியேயான சமரசத்துக்கு தயார் எனத் தெரிவித்தார். எனவே மீளவும் பொய்யாக தெரிவிக்கப்பட்ட ஒரு சமாச்சாரத்துக்காக அடிப்படை மனித உரிமை தொடர்பாக பேரம் பேசும் நிலையே வாமனன் விடயத்திலும் காணப்பட்டிருந்தது.

## 8 மாகாண ரீதியான நிலபரம

ஜுன் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் விளங்கும் பத்திரிகைகளான உதயன், வலம்புரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளை விநியோகிக்க ஆரம்பித்தபோது தாக்கப்பட்டன உதயன் பத்திரிகையின் கொழும்புப் பதிப்பாக சுடரொளிப் பத்திரிகை வெளியே வருகின்றது. எனவே இந்தப் பத்திரிகைகள் மீதான தாக்குதல் கடுமையானதாக அமைந்திருந்தது. அத்துடன் பத்திரிகை முகவர்களும் தாக்கப்பட்டு தகாத வார்த்தைகளாலும் பேசப்பட்டனர்.

நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலமாக பத்திரிகைகள் கிழித்தெறியப்பட்டது. உதயன் நிர்வாகம் தனது விநியோகம் இடம்பெறுவதை தடுத்து நிறுத்தியது. ஒரு மணிநேரத்தின் பின்னரே இது மீண்டும் ஆரம்பமானது. 26 வயதான தினக்குரல் விநியோகிப்பாளர் ஒருவர் மூர்க்கமாகத் தாக்கப்பட்டிருந்தார்.

“சர்வதேச ரீதியான தமிழ் ஈழ அரசாங்கம்” என்ற தலைப்புடன் கூடிய செய்தியை பிரசுரிக்கத் தவறியமைக்காகவே நாட்டைப் பாதுகாக்கும் தமிழ் முன்னணி என்ற அமைப்பென்று தன்னைக் கூறிக்கொண்ட ஒரு பிரிவினர் இத்தாக்குதலை நடத்தினர்.

மேற்படி பிரசுரம் ஜுன் மாதம் 23 ஆம் திகதி அனைத்து பத்திரிகைக் காரியாலயங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன. மறுநாள் பத்திரிகைகளில் அப்பிரசுரம் வெளியாக வேண்டுமெனவும் கேட்கப்பட்டிருந்தது.

ஆனால் உதயன் ஆசிரியரும், பதிப்பாளரும் இதுபற்றிக் கூறுகையில் அப்பிரசுரம் நம்பகத்தன்மை கொண்டதாக இருக்கவில்லை எனத்தெரிவித்தனர். ஜுன் மாதம் 25 ஆம் திகதி காலை உதயன், சுடரொளி பத்திரிகை ஆசிரியர் ந. வித்தியாதரன் அப்பிரசுரம் வெளியிடப்படாது விட்டால் பாராதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவருமென கொழும்பிலுள்ள அவரது வீட்டில் வைத்து தொலைபேசி மூலம் எச்சரிக்கப்பட்டார்.

உதயன் பதிப்பாளர் ஈ. சரவணபவன் இச்சம்பவம் பற்றி யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் கவனத்துக்கும், உதயன் காரியாலயம் அமைந்துள்ள பகுதியின் இராணுவப் பொறுப்பாளரின் கவனத்துக்கும் கொண்டு வந்திருந்தார். ஜுன் மாதம் 27 ஆம் திகதி அனைத்து உதயன் உழியர்களும், செய்தி முகவர்களும் இறுதி எச்சரிக்கையென எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தனர். அதில் பயங்கரவாதத்தோடு மேற்படி பத்திரிகை தொடர்பு வைத்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கையில் தற்சமயம் அமைதி சமாதானம் ஏற்படும் நிலையில் உதயன் அதனைக்கெடுக்க முற்படுவதாக அந்த எச்சரிக்கைக் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. உதயனை ஜுன் 30 ஆம் திகதியுடன் மூடிவிடுமாறும் இல்லையேல் மரணதண்டனையை எதிர்நோக்குமாறும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடும் பாதுகாப்புடன் உதயன் தொடர்ந்து தனது பிரசுரங்களை வெளியிட்டது. தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதும், அரசியல் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு ஊடக நடவடிக்கைகளில்

ஒரு புதிய உத்வேகம் வடக்கே பிறந்தது. எல். ரி. ரி. ஈ. யினர் முறியடிக்கப்பட்ட பின்னர் மக்கள் ஓரளவு மன அமைதியோடு இருந்ததோடு, வடக்கின் அரசியல் சூழ்நிலை ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ. பி. டி. பி ) என்ற ஆளுந்தரப்பின் நீண்டகால பங்காளியான தமிழ்க்கட்சியினால் கட்டுப்படுத்தப்படுவதாக இருந்தது. மற்றுமொரு தமிழ்க்கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் ( ரி. எம். வி. பி ) எல். ரி. ரி. ஈ யிலிருந்து பிரிந்து சென்ற இக்கட்சி வடக்கில் தனது காலை ஊன்றவும் எத்தனித்தது. கிழக்கில் இராணுவ வெற்றிக்கு இக்கட்சி பெரிதும் உதவியிருந்தது. எனவே ஈ. பி. டி. பி, ரி. எம். வி. பி. ஆகியவற்றுக்கிடையிலான அரசியல் போட்டி எதிர்காலத்தில் வடக்கே வெளிப்படையாக இருக்குமெனவும் எதிர்பார்க்கமுடியும்.

இரு கட்சிகளுமே வடக்கில் நன்கு தம்மை வளர்த்துக்கொண்டவையாக இல்லை. இருதரப்பும் மகக்ள் ஆதரவைப் பெற வடக்கே நீண்ட தூரம் செல்ல வெண்டியும் இருக்கின்றது. எதிர்வரும் தோதல்களில் தமிழ் வாக்களர்களது ஆதரவு முக்கியமானதாக இருப்பதுடன், இரு வேட்பாளர்களும் அதற்காக பாடுபடுபவர்களாக இருக்கின்றனர். இது விடயத்தில் வடமாகாணப் பத்திரிகைகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு மாகாணத்தில், ஊடகத்துறை வளர்ச்சி அசமந்தப்போக்குடன் உரிய வளங்களைக் கொண்டிராதிருக்கின்றது. கிழக்கில் மிகச்சில பத்திரிகையாளர்களும், குறிப்பிட்ட சில பதிப்புகளுமே வெளிவருபவையாக இருக்கின்றன. ஊடக அபிவிருத்தி அமைப்பான இன்டர் நியூஸ் கணிப்பில், கிழக்கில் 230 பத்திரிகையாளர்கள் இருப்பதும்,



கால்நூற்றாண்டு கால யுத்தத்தில் அல்லற்பட்ட யாழ்ப்பாண நகரின் தோற்றம் இந்த நகரம் மீளவும் சுமூக நிலைக்கு திரும்ப வேண்டிய சூழல் உருவாக வேண்டியுள்ளது.

இவர்களில் 20 பேர் மட்டுமே முழுமையாக இயங்குவதும் கண்டறியப்பட்டுள்ளது. ஏனையவர்கள் சமயாசமய மற்றும் பகுதிநேர பத்திரிகையாளர்களாகவும், இவர்களில் அநேகர் வாரமொன்றுக்கு சராசரியாக ஒரு செய்தியை மட்டுமே தருபவர்களாகவும் உள்ளனர்.

கிழக்கில் வெளியாகும் தமிழ் வாரப் பத்திரிகையான வார உரைக்கல் கடந்த 2009 மே மாதம் அதன் ஆசிரியர் எம். ஐ. ரஹ்மத்துல்லா தாக்கப்பட்ட நிலையில் மூடப்பட்டது. இப்பத்திரிகை 2007 ஆம் ஆண்டு ஆரம்பமானது. அத்துடன் உள்நாட்டு நிர்வாகம், மற்றும் வழிபாட்டு தலங்களில் நடைபெறும் ஊழல்களை இப்பத்திரிகை சுட்டிக்காட்டி வந்தது. அதன் காரியாலயங்கள் மூன்று தடவைகள் தாக்கப்பட்டன. இறுதியாக தீவைப்புடன் கத்தி மூலமாகவும் தாக்குதல்கள் கடந்த மே மாதம் இடம்பெற்றன. இதனையடுத்து அச்சஞ்சிகை மூடப்பட்டது.

கிழக்கில் உள்ள பத்திரிகையாளர்கள், தலைநகரில் ஊடக சொந்தக்காரரின் ஆர்வமின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். பத்திரிகையாளர்களுக்கு மிகக்குறைவாகவே ஊதியம் தரப்படுகிறது. அத்துடன் அவர்களது செய்தி சேகரிக்கும் செலவு குறைந்தளவிலேயே வழங்கப்படுகிறது. அச்செய்திகளும் அடிக்கடி பிரசுரமாவதில்லை. இதனால் அவர்களது ஊக்கத்திறனுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அநேகமான பத்திரிகையைளார்கள் ஏதோ வகையில் அரச உத்தியோகமொன்றை தங்கியிருப்பவர்களாக இருக்கின்றனர். இவர்கள் ஆசிரியர்களாக அல்லது வேறு அரச தொழில்களைப் புரிகின்றனர். முக்கியமான செய்திகள் கொழும்பிலிருந்து வருகின்ற பத்திரிகையாளர்களால் சேகரிக்கப்படுகிறத.

2007 ஆம் ஆண்டு இலங்கை அரச படைகள் கிழக்கில் எல். ரி. ரி. ஈ அமைப்பை விரட்டியதையடுத்து, அம்மாகாணம் அமைதியான நிலைக்குத் திரும்ப இன்னும் சில காலம் தேவை. சில ஆயுதக்குழுக்களின் கெடுபிடிகளோடு குற்றச்சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கிழக்கு மாகாணம் இலங்கையில் இனரீதியான வகைப்படுத்தலை பெரிதும் கொண்டதாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் சமாந்தர அளவில் இங்குள்ளன. இதன் காரணமாக அரசியல் போட்டிகளும் அதிகரித்ததாக இருக்கின்றது. இதன் காரணமாக கிழக்கில் ஊடகத்துறை கூடுதல் முக்கியத்துவம் பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் தேசிய அளவில் அம்மாகாண நடவடிக்கைகள் தனித்துவமாக இருக்கவேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம் மேற்கு மற்றும் தென்மாகாணங்கள் பிரதான தேசிய கட்சிகளின் முக்கிய அரங்குகளாக இருக்கின்றன. தேர்தலின்போது ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், எதிர்க்கட்சியான

ஐக்கிய தேசியக்கட்சியும் பெருமளவு வன்முறைகளை தேர்தல் காலத்தில் எதிர்நோக்கமுடியும். கொழும்பில் டிசம்பர் 9 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டமொன்றில் அரச ஊடகத்துறை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. முக்கிய எதிர்க்கட்சி அரசியலவாதியொருவர் கருத்த வெளியிட்டபோது அரச ஊடகத்துறை நம்பகத்தன்மையற்றதாக இருப்பதாக் கூறினார். பல தனியார் பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிக்கிறார்களே தவிர முறைப்பாடுகளை தெரிவிக்க முடியாதுள்ளதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச ஊடகக்குழு அரச ஊடகத்துறையை நடுநிலையான போக்கில் ஈடுபடுத்தக்கூடிய தன்மைகள் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது இதன் காரணமாக இது குறித்த

நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசர முன்னுரிமையாக இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 9 பத்திரிகைக் கவுன்ஸிலின் மீள் ஆரம்பம் ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்.

ஜுன் 2009 ஆம் ஆண்டு, இலங்கை அரசு 1973 ஆம் ஆண்டு இலங்கை ஊடக சட்டத்தை மீளவும் கொண்டு வர தீர்மானித்தது. இதற்கென தலைவர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். இந்த கவுன்ஸிலுக்கு அரசு சார்பில் ஒருவரும் இரு தனியார்களும் நியமிக்கப்பட்டனர். ஆயினும் இந்த தீர்மானம் வெற்றிபெறவில்லை ஏனெனில் ஊடக நிறுவனங்களும் ஊடக அமைப்புக்களும் தமது பிரதிநிதிகளை அறிவிக்கத் தவறியிருந்தன.

1973 ஆம் ஆண்டு ஊடக சட்டத்துடன் இலங்கை ஊடகவியலாளர்கள் சுமுகமாக இருந்ததில்லை. ஏனெனில் அதன் செயற்பாடுகள் திருப்தி தரக்கூடியவையாக ஊடகவியலாளர்களுக்கு இருந்ததில்லை.

சிறைத்தண்டனை, சட்டநடவடிக்கை என ஊடகவியலாளரை கடுமையாகக் கட்டுப்படுத்தும் விதிமுறைகள் அதில் காணப்பட்டன.

சில விடயங்களை குறிப்பிடுவதிலும் அச்சட்டம் கடும் விதிமுறைகளைக் கொண்டிருந்தது. அவை பின்வருமாறு:-

1. அரசாங்கத்தின் உள்விவகாரங்கள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள்.
2. ஆயுதப்படைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள்.
3. விலை உயர்வு, மற்றும் பற்றாக்குறைகளை ஏற்படுத்தக்கூடிய பொருளாதாரக் கொள்கை.

1994 ஆம் ஆண்டு ஊடக சமூகமும், இலங்கை அரசும் மேற்குறிப்பிட்ட ஊடகசட்டத்தை நீக்க முடிவு செய்தன.

உள்ளுர் ஊடகவியலாளர்கள் நடத்திய பேச்சக்களின் அடிப்படையில் ஸ்ரீலங்கா பத்திரிகை கவுன்ஸில் நிறுவப்பட்டது. இக்கவுன்ஸில் நாளடைவில் பத்திரிகை முறைப்பாட்டுக் கவுன்ஸிலின் ஆரம்பத்திற்கும் வழியமைத்தது. அத்துடன் இலங்கைப் பத்திரிகை பயிற்சி மையத்தையும் உருவாக்கியது. இலங்கையின் சுதந்திர ஊடக இயக்கம், பத்திரிகை ஆசிரியர்கள், பதிப்பாளர்கள் அமைப்பு ஆகியவற்றின் பங்களிப்புடன் 1998 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

கொழும்பு பிரகடனம் என்று கைச்சாத்திடப்பட்டதாக இலங்கை பத்திரிகை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்கன்டிநேவிய நாடுகளின் நிதிஉதவியுடன் 2003 ஆம் ஆண்டு இலங்கைப் பத்திரிகை பயிற்சி நிறுவனம், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு மையம் ஆகியவை 2003 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டன.

இதன் நடைமுறைகள் சம்பந்தமாக சில சிக்கல்கள் இருந்தன. அவற்றில் அரசாங்கத்தின் தலையீடுகள் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஊடக அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா ஊடக கவுன்ஸிலின் ஆரம்பம் ஊடகத்துறையினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமளிப்பதாக இருக்குமென நம்புகிறார். ஊடக சுதந்திரம் அவசியமானது. ஆனால் மக்களின் சுதந்திரத்தையும் நாம் கவனத்திலெடுக்க வேண்டுமென்பது அவரது கருத்தாகும். ஆனால் இது குறித்து ஊடக சமூகம் திருப்தி கொள்ளவில்லை. அத்துடன் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டக் கவுன்ஸிலின் நடைமுறைகளுக்கு ஆகஸ்ட் மாதத்தில் பூரண ஆதரவு வழங்கப்பட்டது. அத்துடன் இலங்கையில் ஊடகத்துறைக்கு மதிப்பளிக்கவேண்டிய தேவையும் பெரிதும் உணரப்பட்டது. ஊடகத்துறைக்கும், ஏனையயோருக்கும் இடையேயான தொடர்புகள் குறித்தும் விரிவான முறையில் ஆராயப்பட்டிருந்தது.

## 10 ஊடக சுதந்திரத்தை பிரச்சார விடயமாகக் கொள்வது.

ஜெனரல் பொன்சேகாவின் விரைவான ஓய்வு, மற்றும் அவரது நிலைப்பாடு ஆகியவை தேர்தல் நடைமுறைகளில் முக்கிய பங்களிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பிருக்கின்றது. ஆயினும் அவரது இளைப்பாறலுக்கான கடிதம் சில விடயங்களையும் உள்ளடக்கி ஊடகத்துறைக்கு அனுப்பப்பட்டது. அதில் மூன்று விடயங்களுக்கு முக்கியம் வழங்கப்பட்டது.

1. இடம்பெயர்ந்த மக்கள் மீதான கரிசனையின்மை, யுத்த வெற்றிகளை அழிப்பதுடன், தமிழ சிறுபான்மை இனத்தை மீளவும் கலவரமடைய வைப்பதாக இருக்கும்.
2. இலங்கை அரசில் அதிகரிக்கும் ஊழல், ஆயுதப்படையினர் மீது போதிய கவனிப்பின்மை.
3. ஊடகசுதந்திரத்தை இலங்கை அரசு காப்பாற்ற முன்வராமை ஆயினும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை நவம்பர் 15 ஆம் திகதி தனது அரசியல் கட்டுரையில் மேற்குறிப்பிட்ட விடயங்களைத் தவிர்த்து வேறுவிடயங்களான பாதுகாப்பற்ற நிலைபற்றி அவர் குறிப்பிட்டவிடயங்களை தாங்கி வந்திருந்தது.

சர்வதேச ஊடக குழு சந்தித்த முக்கிய எதிரணி

அரசியல் பிரமுகர்கள் ஜெனரல் சரத் பொன்சேகா ராஜபக்ஷ குடும்பத்தின் சர்வாதிகாரப்போக்கை களைய நல்லதோர் வேட்பாளர் எனத் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சியினர் ஜெனரல் பொன்சேகாவினால் பரந்துபட்டமுறையில் அரசியலமைப்பு மாற்றத்தைக் கொண்டுவந்த சீர்திருத்தங்களை ஏற்படுத்த முடியுமென நம்புகின்றனர். இவற்றில் முக்கியமானது நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை அகற்றுவதாகும். பொன்சேகா தம்மை மாற்றிக்கொண்டு செயல்பட முன்வருவார் என்று அவை கருதுகின்றன. அத்துடன் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சக்திமிக்க நாட்டுத்தலைவராக இருந்து சம்பிரதாய பூர்வ தலைவராக மிளிர்வார் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணிக்குத் தலைமை தாங்கும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட சில முடிவுகளைக் கொண்டுள்ளார். அவையாவன :-

1. தகவல் சட்டத்துக்கான உரிமை
2. பத்திரிகை கவுன்ஸிலை நீக்குவது.
3. இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு கமிஷனைப் பலப்படுத்துவது.
4. இலங்கையின் அரச ஊடகத்தை மேம்படுத்துவது.
5. ஊடக நிறுவனங்களை சட்டரீதியாக பாதுகாப்பது.

ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி பதவிக்கு வரும் பட்சத்தில் இவை எவ்வாறு அமுலாகும் என்ற கேள்வி எழுகிறது. உதாரணமாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவது கடந்த காலங்களில் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களின் வாக்குறுதியாக இருந்து வந்தது. ஆனால் பதவிக்கு வந்ததும் அவர்கள் அதனை மறந்தே விடுவார்கள். 1994 ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகார ஆட்சியை ஒழிப்பதாக வாக்குறுதியளித்தார். ஆனால் அவரால் அவ்வாறு செய்ய முடியாது போனது. இறுதியாக ஜனாததிபதி ராஜபக்ஷவும் 2005 ஆம் ஆண்டு நிறைவேற்ற அதிகார ஜனாதிபதி ஆட்சி ஒழிப்புப்பற்றி கூறினார். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தமது குடும்ப பின்னணி, அதாவது ஊடகத்துறையோடு சம்பந்தப்பட்ட அப்பின்னணி பற்றிக் குறிப்பிட்டு ஊடக சீரமைப்புப் பற்றிப் பிரஸ்தாபித்துள்ளார்.

## 11 சிபார்சுகள

பெருமளவு ஊடகத்துறையினர் அரசியல் பிரமுகர்களை சந்தித்த நிலையில் சர்வதேச ஊடக குழுவினர் சில சிபார்சுகளை இலங்கையில் சீரான ஊடக நடைமுறைகள் குறித்து வெளியிட்டுள்ளார்கள். நவம்பர் மாதம் 2009 ஆம் ஆண்டு சர்வதேச பத்திரிகை சம்மேளனத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையிலான சிபார்சில் 2010 ஆம் ஆண்டு தேர்தல்களில் நடைமுறைப்படுத்தப்படவேண்டியவை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதில் ஊடகத்துறை சார்ந்த பல விடயங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு

1. வெளிநாடுகளில் புகலிடம் கோரியுள்ள அனைத்து இலங்கைப் பத்திரிகையாளர்களும் நாடு திரும்பவேண்டும்.
2. அவ்வாறு திரும்பும் அனைத்து பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல்.
3. ஜனாதிபதியிடமிருந்து அரச ஊடகம் சுதந்திரமாக தேர்தல் காலங்களில் நடந்து கொள்ளும் என்ற உத்தரவாதத்தைப் பெறுதல்.
4. தடுத்த வைக்கப்பட்டு, சிறை வைக்கப்பட்ட அனைத்து பத்திரிகையாளரது வழக்குகளையும் மீளாய்வு செய்தல். அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட பத்திரிகையாளருக்கு உரிய பாதுகாப்பை குறித்த கால எல்லையில் வழங்குவதல்.
5. நியாயமான முறையில் இப்பத்திாகையாளருக்கு மன்னிப்பு வழங்குதல்.
6. கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மீதான கொலை, தாக்குதல் அவதூறு, மானநஷ்டம், தடுத்து வைப்பு சம்பந்த நடவடிக்கைகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் மேற்கொள்ளுதல்.
7. தேர்தல் முடிவுற்றதும் அரச ஊடகத்துறையை பொதுச்சேவை நம்பிக்கைக் கட்டளைக்குள் கொண்டுவருவதற்கு அவசர முன்னுரிமை வழங்குதல்.
8. சட்ட ரீதியாக தகவல்களைப் பெறுவதற்கான நடைமுறைகளை உறுதிப்படுத்தி அதனை அமுலாக்குவதற்கான அவசர முன்னுரிமை.

அதேசமயம் ஊடக சொந்தக்காரர்கள் பதிப்பாளர்கள், பத்திரிகையாளர்களுக்கு குறிப்பாக மாகாணங்களிலுள்ளவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குதல். ஊடக நிறுவனங்களின் ஊழியர்கள், உரிமையாளர்களுக்கிடையே தொழில் பாதுகாப்பு உத்தரவாதத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல், குறிப்பிட்ட பகுதியினருக்கு குறுகிய முறையில் இல்லாது அனைத்து இலங்கையர்களுக்கும் ஏற்றாற்போல ஊடக சேவையை விஸ்தரித்தல் என்பவையே இந்த முக்கிய சிபார்சுகளாகும்.

1. சர்வதேச ஊடக சுதந்திர தூதுக்குழுவின் இரு முன்னைய அறிக்கைகளை கீழ்வரும இணையத்தளங்களில் பெறமுடியும் : ஏனைய ஊடக சுதந்திர தூதுக்குழுவின் அறிக்கைகளையும் இதே இணையத்தளத்தில் பெறமுடியும்.

2. http://www.sundaytimes.lk/091011/Columns/political.html

3. டெய்லி மிரர் அறிக்கை அக்டோபர் 19 : http://www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=65127.

4. முழு அறிக்கை விபரமும் இலங்கையின் உத்தியோகபூர்வ செய்தி ஏஜென்ஸி இணையத்தளத்தில் காணப்படுகிறது: http://www.lankapuvath.lk/index.php?option=com_content&view=article&id=4388:beware-publication-of-false-reports-using-senior-army-officers-identities&catid=25:general&Itemid=90.

5. http://www.colombopage.com/archive_091/Oct1256047600RA.html.

6. http://www.defence.lk/new.asp?fname=20091031_01

7. http://www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=70774.

8. அக்டோபர் 22 பி . சரவணமுத்து அவர்களால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரை : http://www.groundviewsorg/2009/10/22/gsp-plus-minding-our-business/

9. வெளிநாடுகளில் தஞ்சம் கோரியுள்ள இலங்கைப் பத்திரிகையாளர்கள்“இலங்கையின்ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் ” என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அக்டோபர் 25 அறிக்கை. http://jdsrilanka.blogspot.com/2009/10/mediafreedom-before-gsp-plus-media.html.

10. http://www.sundayobserver.lk/2009/09/20/fea03.asp.

11. http://www.thesundayleader.lk/2009/10/20/true-or-false/

12. அக்டோபர் 25 ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகை மறுபிரசுரம் செய்த கடிதங்களின் விபரம் : அவை அனுப்பப்பட்ட தபால் குறியீடு : http://www.thesundayleader.lk/2009/10/24/and-now-they-come-for-us/

13. சண்டே லீடர் செய்தி : http://www.thesundayleader.lk/2009/11/04/leaders-response-to-threats-angers-gotabaya/ இந்த அறிக்கையில் சண்டே லீடர் பத்திரிகை மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கிடையேயான கடிதப் பரிவர்த்தனை விரிவாகத்தரப்பட்டுள்ளது .

14. சண்டே டைம்ஸ் செய்திக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட இரு அறிக்கைகள். “Scandalous Plunder of a Battered People” , “The High Price of Freedom”

15. ஆகஸ்ட் செய்தி அறிக்கை “மெனிக் பாமின் கேவல நிலை” : http://www.groundviews.org/2009/08/23/the-shame-of-menik-farm/
http://www.groundviews.org/2009/10/13/breaking-news-flooding-and-unrest-again-at-menik-farm/

16. யுத்தத்தின் பின் 180 நாட்கள் ஒரு கண்ணால் பார்த்த சாட்சியின் அறிக்கை : http://www.groundviews.org/2009/11/18/180-days-after-end-of-war-the-much-anticipated-return-of-idps-an-eyewitness-account/#more-2026

17. இலங்கையின் பிரபலமான முச்சக்கர ஆட்டோ வண்டி.

18. சொனாலி சமரசிங்கவின் முழுக்கடித விபரம் : http://www.groundviews.org/2009/03/26/is-the-president-hiding-lasantha-wickremetunges-killers/

19. இந்த அறிக்கை தயாரகும்போது ஐயந்த நாட்டைவிட்டு தமது குடும்பத்தவர்கள் சகிதம் வெளியேறிவிட்டனர் என்பதை சர்வதேச ஊடக சுதந்திர தூதுக்குழு அறிந்து கொண்டது. தற்காலிகமான முறையில் அவர் பகலிடம் தேடியுள்ளார். அவரது வெளியேற்றம் பெயர் குறிப்பிடப்படாத சில சர்வதேச ஊடக அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது .

20. http://asiapacific.ifj.org/en/articles/popular-news-website-banned-in-sri-lanka

21. சிங்களத்திலான பேட்டியை ஆங்கில குறிப்புகளுடன் காணலாம். http://video.dailymirror.lk/videos/53/mervyn-silva-on-hot-seat

22. இலங்கை கடுழியச் சிறைத்தண்டனை என்பது ஏனைய சில நாடுகளில் குறிப்பிடுகின்ற கட்டாய தொழில் தண்டனைக்கு ஒப்பானதாகும்.

23. இந்த அறிக்கை பதிப்பிற்குச் செல்லும்போது இலங்கை அரசின் சட்டமா அதிபர் பிணை வழங்குவதில் தனக்கு ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்திருந்தார்.

24. தெற்காசிய நாடுகளில் இந்தியா மற்றும் பெரும்பாலான

நாடுகளில் போலன்றி சித்திரவதைக்கெதிரான சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

25. நவம்பர் 1 ஆம் திகதி யசீகரன், வளர்மதி ஆகியோர் முறைப்படி தமது திருமணப்பதிவை மேற்கொண்டனர். அவர்கள் விடுதலை செய்யப்பட்ட மறுகணம் இரு நடைபெறடறது. இதனையடுத்து பெயா குறிப்பிடப்படாத இடமொன்றுக்கு பொலிஸார், மற்றும் புலானாய்வுப் பிரிவினர் தேடுதலுக்கு மத்தியில் அவர்கள் எசம்பர் 10 ஆம் திகதி பயணமாகியிருந்தனர்.

26. நவம்பர் 29 ஆம் திகதி சண்டே டைம்ஸ் பத்திரிகை அறிக்கை http://www.sundaytimes.lk/091129/Columns/political.html

The IFJ is a non-governmental, non-profit organisation that promotes coordinated international action to defend press freedom and social justice through the development of strong, free and independent trade unions of journalists. IFJ Asia-Pacific coordinates IFJ activities in the Asia-Pacific region. The IFJ works closely with the United Nations, particularly UNESCO, the United Nations OHCHR, WIPO and the ILO, the International Committee of the Red Cross, the European Union, the Council for Europe and with a range of international trade union and freedom of expression organisations. The IFJ mandate covers both professional and industrial interests of journalists.

**Visit asiapacific.ifj.org or www.ifj.org for more information.**